القول الفصل في مسألة رؤية الهلال

பிறை குழப்பத்திற்கு
ஓர் அழகிய தீர்வு!

تأليف: أبو عمر حسن علي بن حميد سلطان

ஆசிரியர்:

மௌலவி அபு உமர் ஹசன் அலீ உமரி

வெளியீடு

அஸ்ஸலஃபிய்யா பதிப்பகம்

பிறை குழப்பத்திற்கு ஓர் அழகிய தீர்வு!

ஆசிரியர் : **மௌலவி ஹசன் அலீ உமரி**

மொழி : தமிழ்

பதிப்பு : முதல் பதிப்பு

பதிப்பாண்டு : ஏப்ரல், 2024

பக்கம் : 80

பிரதி : 4000

ஒளியச்சு கோர்வை :

ஏ. எஸ். கிராபிக்ஸ் (98841 43394)

வெளியீடு : Assalafiyyah Publication
Adirampattinam, Tanjavur Dist.

طُبع على نفقة بعض المحسنين

جزاهم الله خيرا

அன்பளிப்பு பிரதி

பொருளடக்கம்

முன்னுரை. 5

இஜ்திஹாத் என்பது ஆய்விலா? நடைமுறையிலா?. 7

பிறை விஷயத்தில் நபிவழியை பின்பற்றுவோம்.. 10

பிறையும் – ஸஹாபாக்களும் 13

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் சம்பவம்... 17

இஜ்திஹாத் சார்ந்த விஷயமும், நடைமுறையும்.. 32

ஒரே ஊரில் தனித்தனியாக இரண்டு பெருநாள்.. 40

பிறையை யார் தீர்மானிப்பது? 46

எல்லைகளை யார் பிரித்தது?. 57

லைலத்துல் கத்ர் இரவு எப்போது?.. 60

அரஃபா நோன்பு எப்போது?... 69

விஞ்ஞான கணிப்பின்படி பிறையை தீர்மானிப்பது.. ...72

ஸலஃப் அறிஞர்களும், சர்வதேச பிறையும் 76

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

முன்னுரை

அல்லாஹ்வின் படைப்புகளில் சந்திரன், மகத்தான ஒரு படைப்பாகும். இந்த படைப்பின் மூலம், அல்லாஹ் பல நோக்கங்களை மனித சமுதாயத்திற்கு தெரியப்படுத்தி உள்ளான். அவற்றில் பிரதானமான ஒன்று தான் சந்திரனின் ஓட்டத்தைக் கொண்டு மாதத்தின் தொடக்கத்தையும், முடிவையும், ஆண்டின் கணக்கையும் அறிவதாகும்.

يَسْأَلُونَكَ عَنِ الْأَهِلَّةِ قُلْ هِيَ مَوَاقِيتُ لِلنَّاسِ وَالْحَجِّ

(நபியே) பிறைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். அ(தற்கு)வை மனிதர்களுக்கும், ஹஜ்ஜு (வணக்கத்து)க்கும் நேரங்களை குறிப்பிடுபவை என நீர் கூறுவீராக! *(அல்குர்ஆன் 2:189)*

பிறை பார்ப்பதை அடிப்படையாக கொண்டு தான் நோன்பின் ஆரம்பத்தையும், முடிவையும், இரு பெருநாட்களையும் முஸ்லிம்கள் காலகாலமாக தீர்மானித்து வருகின்றனர். தமிழகத்தில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை, நமது பகுதியில் பார்க்கின்ற

பிறையை அடிப்படையாக கொண்டு தான், ரமளான் நோன்பின் ஆரம்பத்தையும், இரு பெருநாட்களையும் முஸ்லிம்கள் ஒற்றுமையாக கொண்டாடி வந்துள்ளார்கள். ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிலரால், சர்வதேச பிறை நிலைபாடு தான் சரியானது என்று, நோன்பையும், பெருநாளையும் தனித்து செயல்படுத்தும் நடைமுறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த புதிய நடைமுறையின் காரணமாக முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையும், குழப்பமும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய குழப்பத்திற்கு தீர்வு என்ன என்பதையே இந்நூலில் குறிப்பிட்டுள்ளேன். இஸ்லாமிய அறிஞர்களின் ஆய்வை அடிப்படையாக கொண்டே இந்நூலை எழுதியுள்ளேன்.

பிறை குழப்பத்தில் தெளிவை தேடும் மக்களுக்கு இந்நூலை, பயனளிக்கக் கூடியதாக ஆக்கிட வேண்டி அல்லாஹ்விடமே பிராத்திக்கிறேன்!

அன்புடன்

அபு உமர் ஹசன் அலீ உமரி

hasanumari@gmail.com

பிறை விஷயம் இஜ்திஹாத் என்பது ஆய்விலா? அல்லது நடைமுறையிலா?

இஸ்லாமிய ஃபிக்ஹ் துறையில், பிறை தொடர்பான விஷயத்தில் காலகாலமாக இந்த உம்மத்தில் கருத்து வேறுபாடு இருந்து வந்துள்ளது. பிறை உதயமாகின்ற நேரம் மாறுபடாத, ஒவ்வொரு பகுதியினருக்கும் தனிப்பிறை நிலைபாடு சரியானதா? அல்லது ஏதேனும் ஒரு பகுதியில் பார்க்கப்பட்ட பிறையை மற்ற பகுதியில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்கின்ற சர்வதேச பிறை நிலைபாடு சரியானதா? என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். இரண்டு தரப்பிலும், அறிஞர்கள் ஆதாரங்களை சமர்பித்துள்ளார்கள். அதில் சில ஆதாரங்கள், இரண்டு விதமான பொருளை கொள்வதற்கும் இடமளிக்கும் வகையில் உள்ளது.

فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ

உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர், அதில் நோன்பு நோற்றுவிடவும். *(அல்குர்ஆன் 2: 185)*

உங்களில் எவர் அந்த மாதத்தை அடைகிறாரோ என்பது எந்த பகுதியினர் பிறையை பார்த்து, அந்த

மாதத்தை அடைவார்களோ, அவர்கள் நோன்பு நோற்க வேண்டும். எந்த பகுதியினர் பிறையை பார்க்கவில்லையோ, அந்த பகுதியினர் இன்னும் ரமளான் மாதத்தை அடையவில்லை. எனவே அவர்கள் நோன்பு நோற்க மாட்டார்கள் என முதல் தரப்பிலுள்ள அறிஞர்கள் கூறுகின்றனர்.

உங்களில் எவர் அந்த மாதத்தை அடைகிறாரோ என்பது பொதுவாக சொல்லப்பட்டதினால், ஒரு பகுதியில் பிறை பார்த்த உறுதியான தகவல் கிடைத்தால், மற்ற பகுதியினர் நோன்பை ஆரம்பிக்க வேண்டும் என்று சர்வதேச பிறை நிலைபாட்டை சரிகாணும் இரண்டாம் தரப்பிலுள்ள அறிஞர்கள் கூறுகின்றனர்.

عن أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قال قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
صُومُوا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், பிறை பார்த்து நோன்பு வையுங்கள். பிறை பார்த்து நோன்பை விடுங்கள். *(அறிவிப்பாளர்: அபு ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 1909)*

இந்த ஹதீஸையும், இரண்டு தரப்பிலுள்ள அறிஞர்களும் தங்களின் கருத்துக்கு ஆதாரமாக காட்டுகின்றனர்.

ஆக பிறை தொடர்பான மஸ்அலா, இஜ்திஹாத் அம்சமாக இருப்பதினாலேயே, அறிஞர்கள் இதில்

கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த கருத்து வேறுபாடானது, ஆய்வில் மட்டுமே இருந்துள்ளது. ஆய்வு செய்வதை தாண்டி எந்த ஓர் அறிஞரும், இரண்டு கருத்தையும் ஒரே பகுதியில் நடைமுறைப்படுத்தி காட்டலாம் என்று கூறியதில்லை.

ஒரே பகுதியில் வாழும் முஸ்லிம்கள், இரண்டு கருத்தையும் நடைமுறைப்படுத்தி தங்களுக்குள் பிளவுபட்டு நோன்பையும், பெருநாளையும் ஆக்கிக் கொள்வதற்கு இஸ்லாமிய மார்க்கமும் அனுமதி அளிக்கவில்லை.

பிறை விஷயம் இஜ்திஹாத் என்பது, 14 ஹிஜ்ரி நூற்றாண்டுகளாக ஆய்வில் மட்டும் தான் அறிஞர்களுக்கு மத்தியில் இருந்துள்ளது. இந்த இஜ்திஹாதை ஒரே பகுதியில் நடைமுறைப்படுத்துவது என்பது, எந்த காலத்திலும் இந்த உம்மத்தில் இருந்ததில்லை.

இஸ்லாமிய அறிஞர்கள் பிறை விஷயத்தில் கருத்துவேறுபாடு கொண்டிருந்தாலும், முஸ்லிம் பொதுமக்களோடு சேர்ந்து தான் நோன்பையும், இரு பெருநாட்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றனர். இதற்கான அடிப்படையான காரணம், நோன்பு மற்றும் பெருநாள் போன்ற இபாதத்துகள், முஸ்லிம்கள் அனைவரும் கூட்டாக நிறைவேற்றப்படக்

கூடிய இபாதத்துகள் ஆகும். எனவே இதனை, தனித்து செயல்படுத்துவது உம்மத்தில் குழப்பத்தையும், பிளவையும், மோதல்களையும் தான் உண்டாக்கும்.

மேலும் இவ்வாறு முஸ்லிம்களுக்கு மாற்றமாக தனித்து நோன்பை ஆரம்பிப்பதும், பெருநாளை கொண்டாடுவதும், இஸ்லாமிய அடிப்படைக்கு எதிரானதாகும். எனவேதான் இஸ்லாமிய அறிஞர்களில், சர்வதேச நிலைபாட்டை சரிகாணும் அறிஞர்கள் கூட, நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் சர்வதேச பிறை நிலைபாட்டை சரிகாணவில்லை என்றால், நீங்கள் தனித்து செயல்படக் கூடாது. மாறாக மக்களுடன் சேர்ந்து தான் நோன்பை ஆரம்பிக்கவும், பெருநாளை கொண்டாடவும் வேண்டும் என்று கூறுகின்றனர். ஆக பிறை விஷயம் இஜ்திஹாத் என்பது ஆய்வில் மட்டும் தான் இருந்துள்ளது. எந்த காலத்திலும், அது நடைமுறையில் இருந்ததில்லை. ஆகவே எந்த காலத்திலும் நடைமுறையில் இல்லாத ஒன்றை, நாம் நடைமுறைப்படுத்துவது குழப்பத்தை ஏற்படுத்துவதாகும்.

பிறை விஷயத்தில் நபிவழியை பின்பற்றுவோம்

ஒரு முஸ்லிம் தன்னுடைய நோன்பையும், பெருநாளையும் எந்த நாளில் அமைத்துக் கொள்ள

வேண்டும் என்பதில் நபி ﷺ அவர்களின் வழிகாட்டுதல் என்ன என்பதை அறிவது அவசியமாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ الصَّوْمُ يَوْمَ تَصُومُونَ، وَالفِطْرُ يَوْمَ تُفْطِرُونَ، وَالأَضْحَى يَوْمَ تُضَحُّونَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நோன்பு என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பு நோற்கின்றீர்களோ அதுவே ஆகும். நோன்பை விடுவது என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பை விடுகின்றீர்களோ அதுவே ஆகும். ஈதுல் அழ்ஹா என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் அறுத்து பலியிடுகிறீர்களோ அதுவே ஆகும். *(அறிவிப்பாளர்: அபு ஹுரைரா ؓ, நூல்: திர்மிதி - 697 ஸஹீஹ்)*

இந்த ஹதீஸை அறிவித்து விட்டு இமாம் திர்மிதி ؒ அவர்கள் கூறுகிறார்கள், அறிஞர்களில் சிலர் இந்த ஹதீஸிற்கு விளக்கமாக, நிச்சயமாக நோன்பை ஆரம்பிப்பதும், நோன்பை விடுவதும் ஜமாஅத் மற்றும் பெரும்பான்மையான மக்களுடன் சேர்ந்தே இருக்க வேண்டும் என்பதே இந்த ஹதீஸின் பொருள் என்று கூறியுள்ளார்கள்.

இமாம் ஸன்ஆனி ؒ அவர்கள் கூறுகிறார்கள், பெருநாளை உறுதிப்படுத்த மக்களின் ஒப்புதல் வேண்டும்

என்பதற்கு இந்த ஹதீஸ் ஆதாரமாகும். பிறையை பார்த்து பெருநாளை சிலர் அறிந்தால், மற்ற மக்களின் ஒப்புதலை பெறுவது அவர்கள் மீது கடமையாகும்.

(ஸுபுலுஸ் ஸலாம் - 2/72)

மற்றொரு அறிவிப்பில்,

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الفِطْرُ يَوْمَ يُفْطِرُ النَّاسُ، وَالأَضْحَى يَوْمَ يُضَحِّي النَّاسُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நோன்பை விடுவது எந்த நாளில் மக்கள் விடுகின்றார்களோ அதுவே ஆகும். ஈதுல் அழ்ஹா என்பது எந்த நாளில் மக்கள் அறுத்து பலியிடுகிறார்களோ அதுவே ஆகும். *(அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: திர்மிதி - 802)*

நோன்பை ஆரம்பிப்பது, நோன்பை விடுவது, பெருநாளை கொண்டாடுவது போன்ற வணக்கங்களை மக்களுடன் ஒன்றிணைந்து கூட்டாக ஒரே நாளில், நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது நபி ﷺ அவர்களின் கட்டளையாகும். ஒரே பகுதியில் வசிப்பவர்கள், தனித்தனியாக பிரிந்து வெவ்வேறு நாட்களில் இதனை நடைமுறைப்படுத்துவது நபி ﷺ அவர்களின் கட்டளைக்கு மாற்றமான செயலாகும்.

தமிழகத்திலுள்ள முஸ்லிம்கள் காலகாலமாக

தம் பகுதியில் பார்க்கப்படுகின்ற பிறையை வைத்து நோன்பையும், பெருநாளையும் ஒரு நாளில் கூட்டாக கொண்டாடி வரும் நிலையில், சிலர் அதற்கு மாற்றமாக நாங்கள் சர்வதேச பிறையின் அடிப்படையில் நோன்பையும், பெருநாளையும் கொண்டாடுவோம் என்று தனித்து செயல்படுவது, நபி ﷺ அவர்களின் தெளிவான கட்டளையான மக்களோடு இணைந்து நோன்பையும், பெருநாளையும் ஒரே நாளில் நடைமுறைப்படுத்துங்கள் என்ற கட்டளையை மீறுவதாகும். நபிவழிக்கு முரணாக நடந்து நன்மை கிடைக்கும் என எதிர்ப்பார்ப்பது அறியாமையாகும்.

பிறையும் - ஸஹாபாக்களும்

1. ஆயிஷா رضي الله عنها அவர்களின் சம்பவம்,

عَنْ مَسْرُوقٍ، قَالَ: دَخَلْتُ عَلَى عَائِشَةَ يَوْمَ عَرَفَةَ، فَقَالَتْ اسْقُوا مَسْرُوقًا سَوِيقًا، وَأَكْثِرُوا حَلْوَاهُ قَالَ: فَقُلْتُ: إِنِّي لَمْ يَمْنَعْنِي أَنْ أَصُومَ الْيَوْمَ إِلَّا أَنِّي خِفْتُ أَنْ يَكُونَ يَوْمَ النَّحْرِ، فَقَالَتْ عَائِشَةُ: " النَّحْرُ يَوْمَ يَنْحَرُ النَّاسُ، وَالْفِطْرُ يَوْمَ يُفْطِرُ النَّاسُ

ஆயிஷா رضي الله عنها அவர்களை சந்திப்பதற்கு அரஃபா நாளன்று நான் சென்றேன். (நான் அரஃபா நோன்பை நோற்கவில்லை என்பதை அறிந்துக் கொண்ட

ஆயிஷா ﵂ அவர்கள்) சத்துமாவை செய்து, அதில் இனிப்பை அதிகமாக்கி மஸ்ரூக்கு கொடுங்கள் என்றார்கள். இன்றைய தினம் (மக்காவில்) துல்ஹஜ் 10 நாளாக இருக்குமோ என்று அஞ்சியே நான் (அரஃபா) நோன்பை நோற்கவில்லை என்று கூறினேன். அதற்கு ஆயிஷா ﵂ அவர்கள் மக்கள், எந்த நாளில் அறுத்து பலியிடுவார்களோ அதுவே அறுத்து பலியிடும் நாளாகும். மக்கள், எந்த நாளில் நோன்பை விடுவார்களோ, அதுவே நோன்பை விடுவதற்குரிய நாளாகும் என்றார்கள். *(அறிவிப்பாளர் மஸ்ரூக் ﵀, நூல்: பைஹகீ - 8209 ஸஹீஹ்)*

மதீனாவில் மக்களுடன் ஆயிஷா ﵂ அவர்கள், அரஃபா நோன்பை நோற்றிருந்தார்கள். அந்த நாளில் அவர்களை சந்திப்பதற்கு வந்த மஸ்ரூக் என்ற தாபயீ, இன்று அறுத்து பலியிடக்கூடிய துல்ஹஜ் 10 நாளாக இருக்குமோ என்று எண்ணியதாலேயே நான் அரஃபா நோன்பை (இன்று) நோற்கவில்லை என்றார்கள். அதற்கு ஆயிஷா ﵂ அவர்கள், நாம் வாழுகின்ற மதீனாவில் மக்கள் எந்த நாளன்று அறுத்து பலியிடுகிறார்களோ, அந்த நாள் தான் துல்ஹஜ் பத்தாவது நாளாகும். நம் பகுதி மக்கள் எந்த நாளன்று நோன்பை விடுகின்றார்களோ, அந்த நாள் தான் நோன்பை விடுவதற்குரிய நாளாகும் என்று கூறினார்கள்.

நாம் வாழும் பகுதியிலுள்ள மக்களுடன் சேர்ந்து தான், நாம் நோன்பை ஆரம்பிப்பதையும், நோன்பை விடுவதையும் நடைமுறைப்படுத்த வேண்டும். நம் பகுதியில் வாழும் மக்களுக்கு மாற்றமாக, நாம் தனித்து செயல்படக் கூடாது என்று ஆயிஷா ﵂ அவர்கள், மஸ்ரூக் ﵀ அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார்கள்.

ஆயிஷா ﵂ அவர்கள் தான் நபி ﷺ அவர்களிடமிருந்து, நோன்பை விடுவது எந்த நாளில் மக்கள் விடுகின்றார்களோ அதுவே ஆகும். ஈதுல் அழ்ஹா என்பது எந்த நாளில் மக்கள் அறுத்து பலியிடுகிறார்களோ அதுவே ஆகும் என்ற ஹதீஸை அறிவிக்கிறார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறிய மக்கள் என்பது, நம் பகுதியில் வாழுகின்ற முஸ்லிம்களையே குறிக்கிறது. இந்த பொருளைதான் நபி ﷺ அவர்களின் அறிவிப்பிலிருந்தும், ஆயிஷா ﵂ அவர்கள், மஸ்ரூக் என்ற தாபயீக்கு கொடுத்த விளக்கத்திலிருந்தும் அறியலாம்.

2. அப்துல்லாஹ் பின் உமர் ﵁ அவர்கள்,

قَالَ ابْنُ عُمَرَ صُومُوا مَعَ الْجَمَاعَةِ وَأَفْطِرُوا مَعَ الْجَمَاعَةِ

இப்னு உமர் ﵁ அவர்கள் கூறினார்கள், ஜமாஅத்துடன் சேர்ந்தே நோன்பை ஆரம்பியுங்கள்,

ஜமாஅத்துடன் சேர்ந்தே நோன்பை விடுங்கள். (நூல்: ஹம்பல் ﷺ அவர்கள் தனது பெரிய தந்தையின் மகனாகிய அஹமத் பின் ஹம்பல் ﷺ அவர்களிடமிருந்து இதனை மஸாயில் என்ற நூலில் அறிவிக்கிறார்கள். ஜாதுல் மஆத் நூலில் இமாம் இப்னுல் கய்யிம் ﷺ அவர்கள் இதனை குறிப்பிடுகிறார்கள். இதனை இமாம் ஷுஐப் அல்அர்னாவூத் ஆதாரப்பூர்வமான அறிவிப்பு என்று கூறியுள்ளார்கள்).

நோன்பை ஆரம்பிப்பதும், விடுவதும் கூட்டாக மக்களுடன் சேர்ந்தே நிறைவேற்ற வேண்டும் என இப்னு உமர் ﷺ அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள். இதுதான் மன்ஹஜ் ஸலஃப் ஆகும். இதற்கு மாற்றமாக, பிரிவினையை ஏற்படுத்தி தனித்து செயல்படுவது மன்ஹஜ் ஸலஃபிற்கு எதிரான அம்சமாகும். மன்ஹஜ் ஸலஃப்பை பின்பற்றக்கூடிய அறிஞர்கள், முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினை ஏற்படுத்தி தனியாக நோன்பை மற்றும் பெருநாளை கொண்டாடுவதை தடுத்துள்ளார்கள்.

நம் பகுதியில் வாழும் முஸ்லிம்கள், ஊர் பிறையின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது, சிலர் சர்வதேச பிறையின் அடிப்படையில் தனித்து நோன்பையும், பெருநாளையும் நடைமுறைப்படுத்துவதை ஆலிம்களில் யாரேனும் ஒருவர் சரிகாண்கிறார் எனில்,

உண்மையில் அவர் இஸ்லாமிய அடிப்படை விதிகளை பற்றி அறியாதவராக தான் இருப்பார். மேலும் மன்ஹஜ் ஸலஃப்பை பற்றி புரிதல் இல்லாதவராகவே கருதப்படுவார்.

எனவே பொதுமக்கள், இதுபோன்ற நபர்களை விட்டு மூத்த அறிஞர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் செயல்பட்டால் மட்டுமே, தங்களை ஃபித்னாக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் சம்பவம்

عَنْ كُرَيْبٍ، أَنَّ أُمَّ الْفَضْلِ بِنْتَ الْحَارِثِ، بَعَثَتْهُ إِلَى مُعَاوِيَةَ بِالشَّامِ، قَالَ: فَقَدِمْتُ الشَّامَ، فَقَضَيْتُ حَاجَتَهَا، وَاسْتُهِلَّ عَلَيَّ رَمَضَانُ وَأَنَا بِالشَّامِ، فَرَأَيْتُ الْهِلَالَ لَيْلَةَ الْجُمُعَةِ، ثُمَّ قَدِمْتُ الْمَدِينَةَ فِي آخِرِ الشَّهْرِ، فَسَأَلَنِي عَبْدُ اللهِ بْنُ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا، ثُمَّ ذَكَرَ الْهِلَالَ فَقَالَ: مَتَى رَأَيْتُمُ الْهِلَالَ؟ فَقُلْتُ: رَأَيْنَاهُ لَيْلَةَ الْجُمُعَةِ، فَقَالَ: أَنْتَ رَأَيْتَهُ؟ فَقُلْتُ: نَعَمْ، وَرَآهُ النَّاسُ، وَصَامُوا وَصَامَ مُعَاوِيَةُ، فَقَالَ: " لَكِنَّا رَأَيْنَاهُ لَيْلَةَ السَّبْتِ، فَلَا نَزَالُ نَصُومُ حَتَّى نُكْمِلَ ثَلَاثِينَ، أَوْ نَرَاهُ، فَقُلْتُ: أَوَ لَا تَكْتَفِي بِرُؤْيَةِ مُعَاوِيَةَ وَصِيَامِهِ؟ فَقَالَ: لَا، هَكَذَا أَمَرَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

உம்முல் ஃபள்ல் பின்த் அல்ஹாரிஸ் ﵄ அவர்கள் (ஒரு வேலை நிமித்தம்) என்னை ஷாம் (சிரியா) நாட்டிலிருந்த முஆவியா ﵁ அவர்களிடம் அனுப்பினார்கள். நான்

ஷாம் சென்று அவரது தேவையை நிறைவுசெய்தேன். நான் ஷாமில் இருந்தபோது ரமளான் (முதல்)பிறை எனக்குத் தென்பட்டது. வெள்ளிக்கிழமை இரவில் நான் பிறையைக் கண்டேன்.

பிறகு அந்த (ரமளான்) மாதத்தின் இறுதியில் நான் மதீனா வந்துசேர்ந்தேன்.

அப்போது அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ﵄ அவர்கள் (பயணம் குறித்து) என்னிடம் விசாரித்தார்கள். பின்னர் பிறை குறித்தும் பேசினார்கள். அப்போது "நீங்கள் (ஷாமில்) எப்போது பிறை பார்த்தீர்கள்?" என்று கேட்டார்கள். நான், "நாங்கள் வெள்ளியன்று பிறை கண்டோம்" என்று பதிலளித்தேன். அவர்கள், "நீயே அதைக் கண்டாயா?" என்று கேட்டார்கள். நான், "ஆம் (நானும் கண்டேன்). மக்களும் அதைக் கண்டார்கள். மக்களும் நோன்பு நோற்றனர். முஆவியா ﵁ அவர்களும் நோன்பு நோற்றார்கள்" என்று கூறினேன். அதற்கு அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ﵄ அவர்கள், "ஆனால், நாங்கள் சனிக்கிழமை இரவுதான் (முதல்) பிறை கண்டோம். எனவே, நாங்கள் (ரமளான் மாதத்தின்) எண்ணிக்கையை முப்பது நாட்களாக முழுமையாக்கும் வரை, அல்லது (ஷவ்வால் மாதத்தின் முதல்) பிறையைப் பார்க்கும்வரை நோன்பு நோற்றுக்கொண்டேயிருப்போம்"

என்று சொன்னார்கள். அதற்கு நான், "முஆவியா ﵁ அவர்கள் (முதல்பிறை) கண்டு, நோன்பு நோற்றது உங்களுக்குப் போதாதா?" என்று கேட்டேன். அதற்கு, "இல்லை. இப்படித்தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்" என்று பதிலளித்தார்கள். *(நூல்: ஸஹீஹ் முஸ்லிம் - 1983)*

இப்னு அப்பாஸ் ﵁ அவர்களின், இந்த ஹதீஸை பதிவு செய்த இமாம்கள் அதற்கு தலைப்பிட்டுள்ள வாசகங்கள்,

بَابُ مَا جَاءَ لِكُلِّ أَهْلِ بَلَدٍ رُؤْيَتُهُمْ

இமாம் திர்மிதி ﵀ அவர்கள், ஒவ்வொரு ஊர்வாசிகளுக்கும், அவர்கள் பார்க்கின்ற பிறை பற்றி வந்துள்ள பாடம் என தலைப்பிட்டுள்ளார்கள்.

اخْتِلَافُ أَهْلِ الْآفَاقِ فِي الرُّؤْيَةِ

இமாம் நஸாயி ﵀ அவர்கள், பிறை பார்ப்பதில் (உலகின்) பல பாகங்களை சேர்ந்தவர்கள் வேறுபடுவது என்று தலைப்பிட்டுள்ளார்கள்.

بَابُ بَيَانِ أَنَّ لِكُلِّ بَلَدٍ رُؤْيَتَهُمْ وَأَنَّهُمْ إِذَا رَأَوُا الْهِلَالَ بِبَلَدٍ لَا يَثْبُتُ حُكْمُهُ لِمَا بَعُدَ عَنْهُمْ

ஸஹீஸ் முஸ்லிமில் வந்துள்ள ஹதீஸிற்கு இமாம் நவவீ ﵀ அவர்கள், ஒவ்வொரு ஊரினருக்கும், அவர்கள்

பார்க்கின்ற பிறை தான். ஓர் ஊரில் பிறை பார்க்கப்பட்டால், அவர்களை விட்டு தூரமாக இருக்கின்றவர்களுக்கு அந்த பிறை பொருந்தாது என்பதை தெளிவுபடுத்தி வந்துள்ள பாடம் என தலைப்பிட்டுள்ளார்கள்.

இப்னு அப்பாஸ் ﵁ அவர்களின் சம்பவம் ஹதீஸா? அல்லது அஸரா?

இப்னு அப்பாஸ் ﵁ அவர்கள் கூறிய இந்த வார்த்தை (هَكَذَا أَمَرَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ) இப்படிதான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள் என்ற வார்த்தை, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களோடு தொடர்புடைய ஹதீஸின் வார்த்தையாகும்.

உஸூலுல் ஃபிக்ஹ் துறையில், நபி ﷺ அவர்களிடமிருந்து ஹதீஸ்களை அறிவிக்கின்ற வார்த்தைகளின் தரத்தை பதிவு செய்துள்ளார்கள். அதில் (حدثنا – سمعت) நான் நபி ﷺ அவர்களிடமிருந்து செவிமடுத்தேன், நபி ﷺ அவர்கள் எங்களுக்கு அறிவித்து கொடுத்தார்கள் என்பதை முதலாவது தரத்தில் கொண்டு வந்துள்ளார்கள். ஸஹாபி (قال) நபி ﷺ அவர்கள் கூறினார்கள் என்பதை, இரண்டாவது தரத்தில் கொண்டு வந்துள்ளார்கள். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கட்டளையிட்டார்கள் அல்லது

தடுத்தார்கள் என்ற வார்த்தையை மூன்றாவது தரத்தில் கொண்டு வந்துள்ளார்கள்.

எனவே இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள், இப்படிதான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள் என்பது ஹதீஸ் ஆகும்.

இப்னு அப்பாஸ் ﵄ அவர்களின் இந்த கூற்றுக்கு என்ன பொருள்,

இப்னு அப்பாஸ் ﵄ அவர்களின் அறிவிப்பை ஆய்வு செய்த அறிஞர்கள், இதற்கு இரண்டு விதமான பொருளை கூறியுள்ளார்கள்.

1. பிறை பார்த்து நோன்பை வையுங்கள், பிறை பார்த்து நோன்பை விடுங்கள் என்று நபி ﷺ அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே அவர்களின் கட்டளையின்படி நாம் வசிக்கின்ற பகுதியில் பிறை பார்த்து நோன்பை தொடங்க வேண்டும், பிறை பார்த்து நோன்பை முடிக்க வேண்டும்.

2. மிக தூரத்தில் இருந்து வருகின்ற பிறை அறிவிப்பை ஏற்க வேண்டிய அவசியமில்லை என்ற தகவலை இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள், நபி ﷺ அவர்களிடமிருந்து அறிந்திருந்தார்கள். ஆகவேதான் சிரியாவிலிருந்து குரைப் ﵀

அவர்கள் அறிவித்த பிறை அறிவிப்பை இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் ஏற்காமல் இருந்தார்கள். தகவலை ஏற்கமால் இருப்பதற்கு ஆதாரமாக நபி ﷺ அவர்கள் எங்களுக்கு இப்படிதான் கட்டளையிட்டார்கள் என கூறினார்கள்.

சிரியாவில் பார்க்கப்பட்ட தகவலை ஏற்காமல், மதீனாவில் பார்க்கப்பட்ட பிறையின் அடிப்படையிலேயே செயல்படுவோம் என்று இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் கூறிய தகவல் பரவலாக மற்ற ஸஹாபாக்களுக்கு தெரிந்த பிறகும், எந்த ஒருவரும் அவர்களின் நிலைபாட்டை எதிர்க்கவில்லை. ஸஹாபாக்கள் அவர்கள் பகுதியில் பார்க்கின்ற பிறையின் அடிப்படையிலேயே செயல்பட்டு வந்துள்ளார்கள் என்பதை, இதிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் நான்கு கலீஃஃபாக்களின் ஆட்சியில் கூட மக்காவில் பார்க்கப்பட்ட பிறையை, மற்ற பகுதியினர் ஏற்று செயல்படுத்த வேண்டும் என்று கட்டளையிடப்பட்டதாகவோ, கடிதங்களை எழுதி ஆணையிட்டதாகவோ ஒரு தகவலையும் பார்க்க முடியவில்லை. எனவே ஒவ்வொரு பகுதியிலும் பார்க்கின்ற பிறையின் அடிப்படையில் தான் ஸஹாபாக்கள், செயல்பட்டு வந்துள்ளார்கள்.

சந்தேகம் - 1: அபுதாவூதில் வந்துள்ள வாகன

கூட்டத்தார்களின் சாட்சியத்தை ஏற்று நபி ﷺ அவர்கள் நோன்பை விடுவதற்கும், மறுநாள் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்கும் கட்டளையிட்டார்கள். நபி ﷺ அவர்கள் வெளியில் இருந்து வந்த பிறை சாட்சியத்தை ஏற்று செயல்படுத்தி இருக்கும் போது, இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் குரைப் رحمه الله அவர்களின் பிறை தகவலை ஏற்காமல் விட்டதை எப்படி ஆதாரமாக ஏற்பது?

பதில்: நபி ﷺ அவர்கள் வாகன கூட்டத்தினரின் சாட்சியத்தை ஏற்றுக் கொண்டதற்கான காரணம், அவர்கள் மதீனாவிற்கு அருகாமையிலுள்ள பகுதியில் இருந்து தான் வந்து சாட்சியம் அளித்தார்கள். மேலும் மதீனாவிற்கும், அவர்கள் பிறை பார்த்து சாட்சியம் அளித்த பகுதிக்கும் பிறை உதயமாகின்ற நேரம் வேறுபடாது. ஆகவேதான் நபி ﷺ அவர்கள், அவர்களின் சாட்சியதை ஏற்றுக் கொண்டார்கள்.

இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்களின் சம்பவத்தில், மதீனா மற்றும் சிரியாவிற்கு மத்தியிலுள்ள தூரமானது அதிகமானதாகும். மேலும் அவை இரண்டிற்கு மத்தியிலும் பிறை உதயமாகின்ற நேரமும் மாறுபடக் கூடியதாக உள்ளது. ஆகவேதான் மதீனாவில் வாழ்ந்த இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் சிரியாவில் பார்க்கப்பட்ட பிறை தகவலை ஏற்றுக் கொள்ளவில்லை.

சந்தேகம் - 2: முஅவியா ﵁ அவர்களின் ஆட்சியின் கீழ் தான் மதீனா நகரம் இருந்தது. முஆவியா ﵁ அவர்கள், சிரியாவில் பார்த்த பிறையை இப்னு அப்பாஸ் ﵁ அவர்கள் ஏன் ஏற்கவில்லை?

பதில்: ஆட்சியாளர் தான் ஆட்சி செய்கின்ற பகுதியில் வாழும் மக்களுக்கு பிறை தொடர்பான அறிவிப்பை செய்தால், அதனை ஏற்பது அவரின் ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் மீது கட்டாயமாகும். அதற்கு மாற்றமாக நடப்பதற்கு யாருக்கும் அனுமதியில்லை. எனினும் சிரியாவில் பார்த்த பிறையை மதீனாவாசிகள் ஏற்க வேண்டும் என்று எந்த ஒரு கட்டளையையும் முஆவியா ﵁ அவர்கள் பிறப்பிக்கவில்லை. எனவே முஆவியா ﵁ அவர்கள் எவ்வித கட்டளையையும் பிறப்பிக்காத நிலையில், இப்னு அப்பாஸ் ﵁ அவர்கள் ஏன் அதற்கு கட்டுப்படவில்லை என்ற கேள்வியே அர்த்தமற்றதாகும்.

மேலும் பைஹகீயில் வந்துள்ள அரஃபா நோன்பு தொடர்பாக ஆயிஷா ﵂ அவர்களின் சம்பவத்தில் இருந்தும் ஒரு விஷயத்தை அறிய முடிகிறது. மஸ்ரூக் ﵀ அவர்கள் மதீனாவில், அரஃபா நோன்பை வைக்காமல் இருந்ததற்கு காரணமாக, இன்று மக்காவில் துல்ஹஜ்

பிறை 10 ஆக இருக்குமோ என்று கருதி நான் அரஃபா நோன்பை நோற்கவில்லை என்று கூறினார்கள்.

இந்த சம்பவத்திலிருந்து, மக்காவில் பார்க்கப்படுகின்ற பிறையின் அடிப்படையில் தான் அரஃபா நோன்பை நோற்க வேண்டும் என்பது அவசியமானதாக இருந்திருந்தால், அன்றைய ஆட்சியாளர்கள் அதனை பொது அறிவிப்பாக மக்களுக்கு செய்திருப்பார்கள். அவ்வாறு மக்காவில் பார்க்கப்பட்ட துல்ஹஜ் பிறையை பொது அறிவிப்பு செய்ததாக எந்த தகவலும் இல்லை.

இஸ்லாமிய ஆட்சி நடந்துக் கொண்டிருந்த ஸஹாபாக்கள் மற்றும் தாபயீன்களின் காலத்திலேயே, ஒரு பகுதியில் பார்க்கப்படுகின்ற பிறையை மற்ற பகுதியில் வாழும் மக்களுக்கும் தெரியப்படுத்தி, அனைத்து பகுதி மக்களும் ஒரே நாளில் தான் நோன்பை மற்றும் பெருநாளை கொண்டாட வேண்டும் என்ற ஒரு நடைமுறை இருந்ததில்லை. ஒவ்வொரு பகுதியினரும், அவர்கள் பார்த்த பிறையின் அடிபடையிலேயே செயல்பட்டு வந்துள்ளார்கள்.

எனவே சர்வதேச பிறையின் அடிப்படையில் நோன்பை ஆரம்பிப்பது, பெருநாளை கொண்டாடுவது கட்டாய கடமை என்பது போல், சிலர் நினைத்து கொண்டிருப்பது தவறாகும்.

சந்தேகம் - 3: குரைப் ﷺ மற்றும் இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் தொடர்பாக வருகின்ற ஹதீஸில் கோளாறு உள்ளது. எனவே அதனை எவ்வாறு ஆதாரமாக எடுப்பது?

பதில்: ஒரு ஹதீஸை குறித்து ஸஹீஹானது, ளயீஃஃபானது என்று கூறுவதாக இருந்தால், அந்த கூற்று ஹதீஸ்கலையின் விதிமுறைகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். மேலும் இஸ்லாமிய அறிஞர்கள், அந்த ஹதீஸை பற்றி என்ன தீர்ப்பளித்துள்ளார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

இந்த ஹதீஸை இமாம் முஸ்லிம் ﷺ, இமாம் திர்மிதி ﷺ, இமாம் தாருகுத்னி ﷺ, இமாம் இப்னு ஹஜர் ﷺ, இமாம் இப்னுல் முல்கின் ﷺ, ஷெய்க் அல்பானி ﷺ போன்ற ஹதீஸ்கலையின் இமாம்கள் ஸஹீஹான ஹதீஸ் என தீர்ப்பளித்துள்ளார்கள். ஷெய்க் அல்பானி ﷺ அவர்கள் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்கள், புகாரி மற்றும் முஸ்லிமின் அறிவிப்பாளர்கள் ஆவார்கள் என்று கூறியுள்ளார்கள். புகாரி மற்றும் முஸ்லிமின் அறிவிப்பாளர்கள் தரத்தில் மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் ஆவார்கள்.

இமாம் புகாரி ﷺ அவர்களின் ஸஹீஹுல் புகாரி மற்றும் இமாம் முஸ்லிம் ﷺ அவர்களின் ஸஹீஹ்

முஸ்லிமிலுள்ள ஹதீஸ்கள் அனைத்தும் ஆதாரப்பூர்வ மானது என்பதில் இஜ்மா உள்ளது.

இந்த அறிவிப்பிலுள்ள அறிவிப்பாளர்கள் அனைவரும் மிகவும் பலமான அறிவிப்பாளர்கள் ஆவார்கள். எந்த ஒர் அறிஞரும், இந்த ஹதீஸில் கோளாறு உள்ளது என்று கூறியதில்லை.

தமிழகத்தில், ஹிஜ்ரா காலண்டர் அடிப்படையில் செயல்படுபவர்கள், இந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது இல்லை என சில ஆண்டுகளுக்கு முன்பு கூறினார்கள். இந்த ஹதீஸை குறித்து அவர்களின் விமர்சனமானது, ஹதீஸ் கலையின் விதிமுறைக்குட்பட்ட விமர்சனமும் அல்ல. பிறையை பகலில் (ஸுப்ஹ்வில்) பார்க்க வேண்டும் என்பது ஹிஜ்ரா கமிட்டி ஆதரவாளர்களின் அடிப்பையயான வாதம். ஆனால் பிறையை இரவில் (மக்ரிபில்) தான் பார்க்க வேண்டும் என்று இந்த ஹதீஸ் கூறுகிறது. எனவே தங்களின் கருத்துக்கு முரணாக இருப்பதினால், இந்த ஹதீஸை அவர்கள் ஆதாரமற்றது என்கிறார்கள்.

ஒரு அடிப்படையை சுயமாக உருவாக்கிக் கொண்டு, அதற்கு எதிராக உள்ள ஸஹீஹான ஹதீஸ்களை மறுப்பது, அதில் கோளாறு உள்ளது என்று கூறுவதெல்லாம்

பித்அத்வாதிகளின் பண்பாகும். (அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!)

சந்தேகம் - 4: சிரியாவில், ரமளானின் பிறையை பார்த்த தகவலை குரைப் ﵀ அவர்கள், ரமளானின் பிந்தைய நாட்களில் வந்து சொன்ன காரணத்தினால் தான் இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள், அந்த தகவலை ஏற்கவில்லை. முன்னரே தெரியப்படுத்தி இருந்தால், ஏற்றிருப்பார்கள்.

பதில்: சிரியாவில் வெள்ளிக்கிழமை இரவும், மதீனாவில் சனிக்கிழமை இரவும் ரமளான் பிறை பார்க்கப்பட்டது. மதீனாவில் இரண்டாம் நாள் தான் பிறை பார்க்கப்பட்டது என்ற தகவலை இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் அறிந்திருந்தும், நாங்கள் தாமதாக நோன்பை ஆரம்பித்து விட்டோம். எனவே ஒரு நோன்பை பெருநாளைக்கு பின்பு கழா செய்து கொள்கிறோம் என்று கூறாமல், நாங்கள் ரமளான் மாதத்தின் முப்பது நோன்புகளை பூர்த்தி செய்வோம். அல்லது ஷவ்வால் பிறையை பார்த்தால் நோன்பை விடுவோம் என்றார்கள். இவ்வாறு தான் நபி ﷺ அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள் என்று கூறினார்கள்.

ஆக இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள், சிரியாவில் பார்க்கப்பட்ட பிறை தகவலை ஏற்காமல், மதீனாவில்

பார்க்கப்பட்ட பிறையின் அடிப்படையில் தான் செயல்பட்டுள்ளார்கள்.

மார்க்கத்தை, நபி ﷺ அவர்களிடமிருந்து நேரடியாக கற்ற ஸஹாபாக்களின் புரிதலும், நடைமுறையும் இவ்வாறு தான் இருந்துள்ளது. ஆனால் இன்று சிலர் மார்க்கத்தை முறையாக விளங்காமல், பிறை பார்த்த தகவல் எங்கிருந்து கிடைத்தாலும் அதனை கட்டாயமாக நடைமுறைப்படுத்தி காட்டுவோம் என்று தனித்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் இந்த செயல்பாடானது, முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையும், குழப்பத்தையும் ஏற்படுத்தக் கூடிய காரியமாகும்.

நோன்பையும், பெருநாளையும் மக்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என நபி ﷺ அவர்களின் கட்டளை இருக்க, அதனை பொருட்படுத்தாமல் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினை ஏற்பட்டாலும், தனித்து தான் செயல்படுவோம் என்பது நபிவழிக்கு முரணாகும். இஸ்லாமிய அடிப்படைகளை விளங்கிய எந்த ஓர் அறிஞரும், இத்தகைய பிரிவினையை அங்கீகரிக்க மாட்டார்கள்.

சந்தேகம் - 5: உலகில் பார்க்கப்படுகின்ற பிறை என்பது ஒன்றுதான். ஒவ்வொரு பகுதியினருக்கும்

தனிப்பிறை என்பது இல்லை. எனவே ஒரு பகுதியில் பிறை பார்க்கப்பட்டால், மற்ற பகுதியினர் அதனை ஏற்று செயல்படுத்த வேண்டும். ஓர் இறை, ஒரு மறை, ஒரு பிறை தான்.

பதில்: சர்வதேச பிறை நிலைபாட்டை ஆய்வு ரீதியாக சரிகாணக் கூடிய அறிஞர்கள் கூட 14 ஹிஜ்ரி நூற்றாண்டுகளில், உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் ஒரே நாளில் சேர்ந்து நோன்பையும், பெருநாளையும் கொண்டாடினார்கள் என்பதற்கு எந்த ஓர் ஆதாரமும் இல்லை. ஒவ்வொரு பகுதியினரும் தனித்து தான் செயல்பட்டு வந்துள்ளார்கள் என கூறுகின்றனர்.

இப்னு அப்பாஸ் ﵄ அவர்களின் ஹதீஸ் இதற்கு தெளிவான ஆதாரமாகும். சிரியாவில், ரமளானின் முதல் பிறை வெள்ளிக்கிழமை இரவு தொடங்கியது. மதீனாவில் முதல் பிறை சனிக்கிழமை இரவு தொடங்கியது. சிரியாவும், மதீனாவும் முஆவியா ﵁ அவர்களின் ஆட்சியின் கீழ் தான் இருந்துள்ளது. ஒரே இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருந்த இரு பகுதிகள் வெவ்வேறு நாளில் நோன்பையும், பெருநாளையும் அந்தந்த பகுதியில் வாழும் மக்களுடன் சேர்ந்து தான் கொண்டாடி உள்ளார்கள்.

மேலும் இந்த ஹதீஸிற்கு தலைப்பிட்ட அறிஞர்கள் கூட ஒவ்வொரு பகுதியினரும், அவர்கள் பார்க்கின்ற

பிறையின் அடிப்படையிலேயே செயல்பட வேண்டும் என கூறியுள்ளார்கள்.

குரைப் ﵀ அவர்கள் சிரியாவில் ரமளான் பிறையை பார்த்து விட்டு, இப்னு அப்பாஸ் ﵄ அவர்களிடம் அந்த தகவலை சொல்லும் போது, இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் மதீனாவில் பிறையை பார்த்ததின் அடிப்படையில் தான் நாங்கள் செயல்படுவோம் என்றார்கள். ஆட்சியாளராகிய முஆவியா ﵁ அவர்கள் பிறையை பார்த்தது உங்களுக்கு போதாதா என்று கேட்ட போது, இப்படிதான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள் என இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் கூறினார்கள்.

இந்த இடத்தில் குரைப் ﵁ அவர்கள் நானே நேரடியாக பிறையை பார்த்துள்ளேன். எனவே நான் ஒரு நாளைக்கு முன்பே நோன்பை விடுவேன் என்றோ, பெருநாளை கொண்டாடுவேன் என்றோ இப்னு அப்பாஸ் ﵄ அவர்களிடம் கூறவில்லை.

எனவே ஒரு பகுதியில் மக்கள் ஒற்றுமையாக ஒரு நாளில் நோன்பையோ அல்லது பெருநாளையோ நடைமுறைப்படுத்தும் போது, அவர்களுக்கு மாற்றமாக சிலர், தனித்து செயல்படுவதற்கு இஸ்லாமிய மார்க்கத்தில் எவ்வித ஆதாரமும் கிடையாது. இஸ்லாமிய

வரலாற்றில் ஒரே ஊரில் வாழும் மக்கள் நோன்பையும், பெருநாளையும் தனித்தனியாக வெவ்வேறு நாளில் கொண்டாடியதாக வரலாற்றில் ஒரு தகவலும் இல்லை. இந்த வழிமுறையானது கடந்து முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட நூதனமான அம்சமாகும்.

இஜ்திஹாத் சார்ந்த விஷயமும், அதனை நடைமுறைப்படுத்துவதும்

ஒரு சில சட்டங்களை, ஆய்வு செய்யும் போது ஒன்றுக்கும் மேற்பட்ட கருத்துகளை கொள்வதற்கு மார்க்கம் இடமளித்திருக்கும். ஒவ்வொரு தரப்பிலுள்ள அறிஞர்களும், தங்களின் கூற்றுக்கு ஆதாரத்தை சமர்ப்பிப்பார்கள். இத்தகைய அம்சங்களுக்கே இஜ்திஹாத் என சொல்லப்படும். இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட கருத்துகள் சொல்லப்பட்டாலும், அவற்றில் ஒரு கருத்து மட்டுமே சரியானதாகும். மற்ற அனைத்து கருத்துகளும் பிழையானதாகும். இதில் சரியாக ஆய்வு செய்தவருக்கு இரண்டு மடங்கு நன்மை உண்டு. தவறாக ஆய்வு செய்தவருக்கு ஒரு நன்மை அளிக்கப்படும். பிறையும், இஜ்திஹாத் சார்ந்த ஒரு விஷயமாகும்.

நமது பகுதியில் பார்க்கப்படுகின்ற பிறை நிலைபாடு சரியானதா? அல்லது சர்வதேச பிறை நிலைபாடு

சரியானதா? என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். இத்தகைய இஜ்திஹாத் சார்ந்த விஷயத்தை ஆய்வு செய்த அறிஞர்கள், தங்களின் கருத்துக்கான ஆதாரங்களை ஆய்வு ரீதியாக தெளிவுப்படுத்தியுள்ளார்கள்.

ஆனால், நடைமுறையில் ஒவ்வொரு தரப்பிலுள்ள அறிஞர்களும், தங்களின் கருத்தின் படி செயல்படாமல், அவர்கள் வாழுகின்ற பகுதிகளில் பெரும்பான்மை மக்களின் முடிவின் படியே செயல்பட்டுள்ளார்கள். ஏனெனில் நோன்பு மற்றும் பெருநாள் போன்ற இபாதத்துகள் கூட்டாக நிறைவேற்றப்படக் கூடிய வணக்கங்கள் ஆகும். ஆகவேதான் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தாமல், அந்த அறிஞர்கள் மக்களுடன் சேர்ந்தே இந்த இபாதத்துகளை நடைமுறைப்படுத்தி உள்ளார்கள்.

இஜ்திஹாத் சார்ந்த விஷயங்கள், தனி நபர் தொடர்பான அம்சங்களாக இருந்தால், அதில் தனக்கு விருப்பமான கருத்தை செயல்படுத்துவதில் எவ்வித பிரச்சனையும் ஏற்பட போவதில்லை. உதாரணத்திற்கு தொழுகையில், ஸஜ்தாவிற்கு செல்லும் போது கைகளை முதலில் ஊன்ற வேண்டுமா? அல்லது கால் மூட்டுகளை முதலில் ஊன்ற வேண்டுமா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

ஒரு மஸ்ஜிதில் அருகருகில் தொழும் இருவர், இந்த கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் செயல்படும் போது, எந்த பிரச்சனையும் அவர்களுக்குள் ஏற்பட போவதில்லை. இவர்களின் இந்த கருத்து வேறுபாட்டால், உம்மத்திற்கும் எந்த பாதிப்பும் இல்லை.

ஆனால் பிறை விஷயம், இவ்வாறு தனி நபர் தொடர்பான அம்சம் இல்லை. மாறாக அது ஜமாஅத்தாக, முஸ்லிம்கள் கூட்டாக நிறைவேற்றப்படக் கூடிய ஒரு வணக்கம் ஆகும். எனவேதான் நபி ﷺ அவர்கள் இதனை மக்களுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என கட்டளையிட்டுள்ளார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நோன்பு என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பு நோற்கின்றீர்களோ அதுவே ஆகும். நோன்பை விடுவது என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பை விடுகின்றீர்களோ அதுவே ஆகும். ஈதுல் அழ்ஹா என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் அறுத்து பலியிடுகிறீர்களோ அதுவே ஆகும். *(அறிவிப்பாளர்: அபு ஹுரைரா ؓ, நூல்: திர்மிதி - 697 ஸஹீஹ்)*

இவ்வாறு மக்களுடன் ஒற்றுமையாக செயல்படுத்த வேண்டிய வணக்கத்தை, சிலர் தனித்து செயல்படுத்தும் போது பிரவினையும், பகைமையும், குழப்பமும் தான்

உண்டாகும். அதனைதான் நாம் இன்று கண்கூடாக பார்த்து வருகிறோம்.

மேலும் மார்க்கத்தில் நமக்கு விருப்பமான ஒரு காரியமாக இருந்தாலும், அதனை செயல்படுத்தினால் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஃபித்னா ஏற்படும் என்றால், அந்த காரியத்தை செயல்படுத்தாமல் இருப்பது நபிவழியாகும்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَهَا يَا عَائِشَةُ، لَوْلاَ أَنَّ قَوْمَكِ حَدِيثُ عَهْدٍ بِجَاهِلِيَّةٍ لَأَمَرْتُ بِالْبَيْتِ، فَهُدِمَ، فَأَدْخَلْتُ فِيهِ مَا أُخْرِجَ مِنْهُ، وَأَلْزَقْتُهُ بِالأَرْضِ، وَجَعَلْتُ لَهُ بَابَيْنِ، بَابًا شَرْقِيًّا، وَبَابًا غَرْبِيًّا، فَبَلَغْتُ بِهِ أَسَاسَ إِبْرَاهِيمَ

நபி ﷺ அவர்கள், "ஆயிஷாவே! உன்னுடைய கூட்டத்தினர் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களாக இல்லையென்றால் கஅபாவை இடிக்குமாறு நான் கட்டளையிட்டிருப்பேன். (இடிக்கப்பட்டதும்) வெளியே விடப்பட்ட பகுதியையும் அதனுள் சேர்த்து(க் கட்டி) இருப்பேன். உயர்ந்திருக்கும் தளத்தைத் தரையோடு தரையாக்கியிருப்பேன்; மேலும், கிழக்கே ஒன்றும் மேற்கே ஒன்றுமாக இரண்டு வாசல்களை அமைத்திருப்பேன்; இதன் மூலம் இப்ராஹீம் عليه السلام அவர்கள் அமைத்த அடித்தளத்தில் (கஅபாவை) எழுப்பியவனாய்

ஆகியிருப்பேன்!" என்றார்கள். *(அறிவிப்பாளர்: ஆயிஷா ﵁, நூல்: புகாரி - 1586)*

மற்றொரு அறிவிப்பில்,

"உன் கூட்டத்தினர் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களாயிருப்பதால், அவர்களின் உள்ளத்தில் வெறுப்பு தோன்றும் என்ற அச்சம் எனக்கில்லாவிட்டால் நான் இச்சுவரை கஅபாவினுள் இணைத்து அதன் கதவைத் கீழிறக்கி பூமியோடு சேர்ந்தால் போலாக்கியிருப்பேன்" என்று பதிலளித்தார்கள். *(நூல்: புகாரி - 1584)*

கஅபாவை நபி இப்ராஹீம் ﵇ அவர்கள் கட்டிய முறையில் கட்டி எழுப்ப வேண்டும் என்பது நபி ﷺ அவர்களின் விருப்பமாக இருந்தாலும், அதனை நபி ﷺ அவர்கள் செயல்படுத்தவில்லை. இதனை செயல்படுத்தினால், மக்கள் மத்தியில் குழப்பமும் மற்றும் வெறுப்பும் ஏற்படும். ஆகவேதான் நபி ﷺ அவர்கள் தனக்கு விருப்பமான காரியத்தை நிறைவேற்றாமலேயே விட்டு விட்டார்கள். நபி ﷺ அவர்களின் இந்த வழிமுறையை ஸஹாபாக்களும், தங்களின் வாழ்க்கையில் பின்பற்றினார்கள். அந்த வழிமுறைகளை நாமும் பின்பற்றி நடந்தால், பல குழப்பங்கள் தோன்றாமல் இந்த உம்மத்தை நம்மால் பாதுகாக்க முடியும்.

உஸ்மான் ؓ மினாவில் எங்களுக்கு நான்கு ரக்அத்கள் தொழுகை நடத்தினார்கள். இது பற்றி இப்னு மஸ்வூத் ؓ அவர்களிடம் கூறப்பட்டபோது ‘இன்னாலில்லாஹி வ இன்னாஇலைஹி ராஜிஊன்’ என்று கூறினார்கள். பின்னர் ‘நான் நபி ﷺ அவர்களுடன் இரண்டு ரக்அத்களாகத் தொழுதிருக்கிறேன். அபூ பக்ர் ؓ உடனும் மினாவில் இரண்டு ரக்அத்களாகத் தொழுதிருக்கிறேன். உமர் ؓ உடனும் மினாவில் இரண்டு ரக்அத்களாகத் தொழுதிருக்கிறேன். இந்த நான்கு ரக்அத்களுக்குப் பகரமாக ஒப்புக் கொள்ளப்பட்ட இரண்டு ரக்அத்கள் எனக்குப் போதும்’ என்று கூறினார். *(நூல்: புகாரி - 1084)*

மினாவில் இரண்டு ரக்அத்துகள் தொழுவது தான் நபிவழியாகும் என அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ؓ அவர்கள் கூறினார்கள். ஆனால், நபி ﷺ அவர்கள் மினாவில் இரண்டு ரக்அத்துகள் கஸராக தொழுகை நடத்தியது தனது உம்மத்தவர்களுக்கு இலகுவானதை நபி ﷺ அவர்கள் நாடினார்கள். முழுமைப்படுத்தி நான்கு ரக்அத்துகள் தொழுவதும் அனுமதிக்கப்பட்டது தான் என உஸ்மான் ؓ அவர்கள் கருதினார்கள். இது அவர்களின் இஜ்திஹாத் ஆகும்.

அப்துல்லாஹ் பின மஸ்வூத் ؓ அவர்களிடம், இந்த மஸ்அலாவை குறித்து மக்கள் கேட்ட போது, மினாவில்

இரண்டு ரக்அத்துகள் தொழுவது தான் நபிவழி, நான்கு ரக்அத்துகள் தொழக் கூடாது என பதிலளித்தார்கள். ஆனால் அதே அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ அவர்கள், மினாவில் உஸ்மான் ؓ அவர்களை பின் தொடர்ந்து தொழும் போது நான்கு ரக்அத்துகள் தொழுதார்கள்.

فَقِيلَ لَهُ عِبْتَ عَلَى عُثْمَانَ ثُمَّ صَلَّيْت أَرْبَعًا، قَالَ: الْخِلَافُ شَرٌّ

உஸ்மான் ؓ அவர்கள் நான்கு ரக்அத்துகள் தொழுகை நடத்தியது தவறு என்று கூறிவிட்டு, தாங்கள் அவருடைய இமாமத்தில் நான்கு ரக்அத்துகள் தொழுதீர்களே என வினவப்பட்ட போது, அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ அவர்கள் கூறினார்கள், இதில் (இமாமை பின் தொடர்ந்து தொழும் போது) முரண்படுவது தீமையாகும் என்றார்கள். *(நூல்: அபுதாவூத் - 1960)*

மினாவில் மக்கள், ஹஜ்ஜின் கிரியைகளை செயல்படுத்த உஸ்மான் ؓ அவர்களின் ஆட்சி காலத்தில் கூடியிருக்கும் போது, ஆட்சியாளராகிய உஸ்மான் ؓ அவர்கள், தனது இஜ்திஹாத் அடிப்படையில் நான்கு ரக்அத்துகள் தொழுகை நடத்துகிறார்கள். நபி ﷺ அவர்கள் இரண்டு ரக்அத்துகள் தான் மினாவில் தொழுதார்கள். எனவே அதுதான் சரியான வழிமுறை, நான்கு ரக்அத்துகள் தொழக் கூடாது என அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ அவர்கள் கூறினாலும், உஸ்மான் ؓ

அவர்களின் இமாமத்திற்கு பின் நின்று தொழும் போது, நான்கு ரக்அத்துகள் தொழுதார்கள். அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ﷺ அவர்களின் பார்வையில் மினாவில் இரண்டு ரக்அத்துகள் தொழுவது தான் சரியான கருத்தாக இருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்த நாடினால் குழப்பம் ஏற்படும் என்பதை அறிந்ததினால், முரண்படாமல் நடந்துக் கொண்டார்கள். இவ்வாறான அம்சங்களில் முரண்படுவது தீங்காகும் என மக்களுக்கு அறிவுரை செய்தார்கள்.

இதே வழிமுறையை தான் இஸ்லாமிய அறிஞர்களில், சர்வதேச பிறை நிலைபாட்டை சரிகாணக் கூடிய அறிஞர்களின் தீர்ப்புகளிலும் காணலாம். சர்வதேச பிறை நிலைபாட்டை ஆய்வு ரீதியாக சரியானது என தீர்ப்பளித்திருந்தாலும், நடைமுறை என வரும்போது நீங்கள் வசிக்கக் கூடிய பகுதியில் வாழும் மக்கள் அதற்கு உடன்படவில்லை என்றால், தனித்து செயல்படாமல், மக்களுடன் சேர்ந்தே நோன்பையும், பெருநாளையும் அமைத்துக் கொள்ளுங்கள் என கூறுகிறார்கள்.

சவூதியின் முன்னாள் முஃப்தி அஷ்ஷெய்க் இப்னு பாஸ் ﵀ அவர்கள் கூறுகிறார்கள், மக்களுடன் சேர்ந்து நோன்பு நோற்பதும், மக்களுடன் சேர்ந்து நோன்பை விடுவதும், அவர்கள் ஊரில் வசிக்கின்ற முஸ்லிம்களுடன்

சேர்ந்து பெருநாளை கொண்டாடுவதும் அவர்கள் மீது கடமையாகும். *(ஃபதாவா அல்லஜ்னத்து தாயிமா - 10/94)*

இஜ்திஹாத் சார்ந்த விஷயத்தை நடைமுறைப்படுத்தினால், குழப்பம் ஏற்படும் என்றிருந்தால், அங்கு எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை நபி ﷺ அவர்களின் வழிமுறையிலிருந்தும், ஸஹாபாக்களின் புரிதலிலிருந்தும், மார்க்க அறிஞர்களின் வழிகாட்டுதலிலிருந்தும் தெளிவாக அறிந்துக் கொண்டோம்.

தமிழகத்தில் 30 வருடங்களுக்கு முன்பு சர்வதேச பிறை நிலைபாட்டை நடைமுறைப்படுத்தியவர்கள். இந்த அணுகுமுறையை அறிந்திருந்தால், சர்வதேச பிறை நிலைபாட்டை தமிழகத்தில் அறிமுகப்படுத்தியே இருக்க மாட்டார்கள். முஸ்லிம்களுக்கு மத்தியில், இந்த பிரிவினையும் ஏற்பட்டிருக்காது.

ஒரே ஊரில் பெருநாளை தனித்தனியாக இரண்டு நாட்கள் கொண்டாடலாமா?

நமது பகுதிகளில் இன்று இருப்பது போல், ஓர் ஊரில் சிலர் ரமளான் நோன்பை நோற்றிருப்பார்கள். வேறு சிலர், சர்வதே பிறையை பின்பற்றுவதாக சொல்லிக் கொண்டு அதே நாளில் ஈதுல் ஃபித்ர் பெருநாளை

கொண்டாடுவார்கள். அவ்வாறே சிலர் துல்ஹஜ் 9 அன்று அரஃபா நோன்பை நோற்றிருப்பார்கள், வேறு சிலர் ஈதுல் அழ்ஹா பெருநாளை கொண்டாடுவார்கள், குர்பானி பிராணிகளை அறுத்து பலியிடுவார்கள்.

இது போன்ற முறையில் செயல்படுவதற்கு மாரக்கத்தில் அனுமதி உள்ளதா? இவ்வாறு முன்சென்ற ஸலஃபுகள் செயல்பட்டுள்ளார்களா? என்று பார்த்தால், அவ்வாறு செயல்பட்டதாக ஒரு தகவலும் இல்லை. பிறை விஷயத்தில் அறிஞர்கள், தம் பகுதியில் பார்க்கப்படுகின்ற பிறை நிலைபாடு சரியானதா? அல்லது எங்கிருந்து தகவல் வந்தாலும் ஏற்கின்ற சர்வதேச பிறை நிலைபாடு சரியானதா? என்பதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும், ஒரே ஊரில், அவர்கள் இந்த இரண்டு கருத்தின் அடிப்படையிலும் செயல்பட்டதாக ஓர் ஆதாரத்தையும் பார்க்க முடியவில்லை.

அவ்வாறு தனித்து செயல்படாமல் இருந்ததற்கான அடிப்படையான காரணம், நபி ﷺ அவர்களின் மக்களுடன் சேர்ந்தே நோன்பை ஆரம்பியுங்கள். மக்களுடன் சேர்ந்தே பெருநாளை கொண்டாடுங்கள் என்ற கட்டளையே ஆகும். எனவேதான் அறிஞர்களின் கருத்து வேறுபாடு ஆய்வுடன் மட்டும் இருந்தது. நடைமுறையில் எந்த காலத்திலும் இருந்ததில்லை.

இஸ்லாமிய அடிப்படைகளையும், விதிமுறைகளையும் அறிந்திருந்ததினால், அந்த அறிஞர்கள் இதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இன்று இதனை நடைமுறைப்படுத்துபவர்களுக்கு மார்க்கத்தின் அடிப்படைகளும், விதிமுறைகளும் தெரியவில்லை. அது தெரியாத காரணத்தினால் தான் இதனை, நடைமுறைப்படுத்தி சமுதாயத்தில் பிளவை ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். மன்ஹஜ் ஸலஃப் என்பது சமுதாயத்திற்கு மத்தியிலுள்ள பிளவுகளை குறைத்து, ஒற்றுமையை நோக்கி அவர்களை அழைக்கும் ஒரு பாதை ஆகும். அத்தகைய பாதையில் பயணித்த அறிஞர்கள், பிறையினால் சமுதாயத்தில் பிளவு ஏற்படக் கூடாது என்பதில் மிக கவனமாக இருந்துள்ளார்கள்.

ஃபிக்ஹ் துறையில், ஓர் ஊரில் சிலர் பார்த்த பிறை சாட்சியத்தை ஆட்சியாளர் அல்லது பிறை அதிகாரத்தை பெற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை பற்றி அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் இந்த மஸ்அலாவை பற்றி கூறுகிறார்கள்,

எவர் ரமளான் மாதத்தின் முதல் பிறையை அல்லது

ஷவ்வால் மாதத்தின் முதல் பிறையை பார்த்து சாட்சியம் அளித்த போது, அவருடைய சாட்சியம் மறுக்கப்பட்டால், அவர் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதில் மூன்று கருத்துகள் உள்ளது என்கிறார்கள்.

1. அவர் தான் பார்த்த பிறையின் அடிப்படையில் தன்னளவில் ரமளான் முதல் நோன்பை ஆரம்பிப்பார். அவ்வாறே ஷவ்வால் மாதத்தின் பிறையின் அடிப்படையில் ரமளான் நோன்பை விட்டுவிடுவார். ஆயினும் அவர், இதனை பகிரங்கப்படுத்தாமல் மறைமுகமாக செயல்படுத்துவார். இந்த கருத்தை இமாம் ஷாஃபி ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள்.

2. அவர் தான் பார்த்த பிறையின் அடிப்படையில் தன்னளவில் ரமளான் முதல் நோன்பை ஆரம்பிப்பார். ஆனால் அவர் தான் பார்த்த ஷவ்வால் பிறையின் அடிப்படையில் செயல்படாமல், ரமளான் நோன்பை நோற்று மக்களுடன் நோன்பை விடுவார். இந்த கருத்தை இமாம் அபு ஹனீஃபா ﵀ , இமாம் மாலிக் ﵀, இமாம் அஹமத் பின் ஹம்பல் ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள்.

3. அவர் தான் பார்த்த பிறையின் அடிப்படையில்

இரண்டு இடங்களிலும் (ரமளானின் ஆரம்ப பிறை மற்றும் ஷவ்வால் முதல் பிறை) செயல்படாமல் மக்களுடன் சேர்ந்தே நோன்பை ஆரம்பிப்பார். மக்களுடன் சேர்ந்தே நோன்பை விடுவார். இந்த கருத்தை இமாம் அஹமத் பின் ஹம்பல் ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள். ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் இந்த கருத்தையே தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதுதான் மற்ற இரண்டு கருத்துகளை விட மிக வலுவானது என கூறுகிறார்கள்.

ஏனெனில் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நோன்பு என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பு நோற்கின்றீர்களோ அதுவே ஆகும். நோன்பை விடுவது என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பை விடுகின்றீர்களோ அதுவே ஆகும். ஈதுல் அழ்ஹா என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் அறுத்து பலியிடுகிறீர்களோ அதுவே ஆகும். *(நூல்: திர்மிதி - 697)*

இந்த ஹதீஸை அறிவித்து விட்டு இமாம் திர்மிதி ﵀ அவர்கள் கூறுகிறார்கள், அறிஞர்களில் சிலர் இந்த ஹதீஸிற்கு விளக்கமாக, நிச்சயமாக நோன்பை ஆரம்பிப்பதும், நோன்பை விடுவதும் ஜமாஅத் மற்றும்

பெரும்பான்மையான மக்களுடன் சேர்ந்தே இருக்க வேண்டும் என்பதே இந்த ஹதீஸின் பொருளாகும் என்று கூறியுள்ளார்கள். *(பார்க்க: மஜ்மூஉல் ஃபதாவா - 25/114)*

ஒருவர் அவர் வசிக்கின்ற பகுதியில் பிறையை நேரடியாக பார்த்து சாட்சி சொல்லும் போது, அவருடைய சாட்சியம் மறுக்கப்பட்டால் அவர் நோன்பு நோற்கலாம் அல்லது நோன்பை விடலாம் என்று அனுமதி அளித்த அறிஞர்கள் கூட அவர், அதனை பகிரங்கப்படுத்தாமல் மறைமுகமாக செயல்படுத்த வேண்டும் என்கிறார்கள். இதனை பகிரங்கமாக செய்யும் போது மக்களுக்கு மத்தியில் குழப்பம் உண்டாகும் என்பதினாலேயே இவ்வாறு மறைமுகமாக செயல்படுத்த வேண்டும் என்கிறார்கள்.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஷவ்வால் மாதத்தின் முதல் பிறையை தனி நபர் கண்டால் (அவருடைய சாட்சியம் ஏற்கப்படவில்லை என்றால்)மக்களுக்கு தெரியும் விதத்தில் அவர் நோன்பு இல்லாததை பகிரங்கப்படுத்தக் கூடாது என்பதில் அறிஞர்கள் ஒருமித்த கருத்தில் உள்ளார்கள். *(நூல்: மஜ்மூஉல் ஃபதாவா - 25/204)*

இஸ்லாமிய அறிஞர்கள், பிறை பார்த்து சாட்சியம் மறுக்கப்பட்டவர் விஷயத்தில் இப்படிதான் நடந்து

கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கும் போது, வேறொரு நாட்டில் பார்த்த பிறையை அடிப்படையாக கொண்டு நோன்பையும், பெருநாளையும், குர்பானியையும் நடைமுறைப்படுத்தி காட்டுபவர்களை என்னவென்று சொல்வது?

கூட்டாக நிறைவேற்ற வேண்டிய இபாதத்துகளை, மார்க்கம் தனித்து செயல்படுத்துவதற்கு அனுமதிக்காத போது, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆதாரத்தை இவர்கள் எங்கிருந்து எடுத்தார்கள்? இதில் இவர்களுக்கு யார் ஸலஃ்ப்?

பிறையை யார் தீர்மானிப்பது?

நோன்பை ஆரம்பிப்பதற்கும், அதனை விடுவதற்கும், பெருநாளை கொண்டாடுவதற்கும் பிறை தான் அடிப்படையாக இருக்கிறது. எனவே அதனை தீர்மானிப்பதற்கான அதிகாரம் யாரிடம் உள்ளது என்ற அடிப்படையை நாம் விளங்கிக் கொண்டால், இதில் குழப்பம் அடையாமல் இருக்கலாம்.

நபி ﷺ அவர்களின் காலத்தில் பிறையை பார்த்தவர்களே, மக்களுக்கு பிறை பார்த்த தகவலை அறிவித்து விட மாட்டார்கள். மாறாக நபி ﷺ அவர்களிடம், பிறை பார்த்த தகவலை தெரிவிப்பார்கள். நபி ﷺ அவர்கள்

தான் மக்களுக்கு பிறையை அறிவிப்பார்கள். இதுதான் பிறையை அறிவிப்பதற்கு, இஸ்லாம் கூறும் வழிமுறை.

நபி ﷺ அவர்களின் மரணத்திற்கு பிறகு, இஸ்லாமிய ஆட்சியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரத்தின் கீழ் இயங்கும் காஜி போன்ற அதிகாரிகள் தான் பிறை அறிவிப்பை மக்களுக்கு செய்வார்கள். இதுவே காலகாலமாக முஸ்லிம்களிடம் உள்ள நடைமுறை ஆகும்.

பிறை அறிவிப்பை ஆட்சியாளர்களும், அவர்களின் அதிகாரத்திற்கு கீழ் இயங்கும் காஜிகளும் செய்வதற்கான நோக்கம், நோன்பை ஆரம்பிப்பது, அதனை பூர்த்தி செய்து விடுவது, பெருநாளை கொண்டாடுவது போன்ற இபாதத்துகள் முஸ்லிம்கள் அனைவராலும், கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய இபாதத்துகள் ஆகும். கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய இந்த இபாதத்தை செயல்படுத்துவதற்கான அதிகாரம், ஆட்சியாளர் அல்லது அவரது ஆட்சியின் கீழ் இயங்கும் காஜிகளிடம் இருந்தால் மட்டும் தான், மக்கள் கூட்டாக செயல்பட முடியும்.

இந்த அதிகாரத்தை தனிநபர்கள் கையில் எடுத்தால், ஒரே ஊரில் வருடத்திற்கு ஆறு பெருநாளை கொண்டாட வேண்டிய சூழல் தான் ஏற்படும். அத்தகைய குழப்பத்தை தான், நம் பகுதிகளில் காண்கிறோம்.

நபி ﷺ அவர்களின், நோன்பையும் மற்றும் பெருநாளையும் மக்கள் ஒற்றுமையாக ஒரே நாளில் கொண்டாட வேண்டும் என்ற கட்டளையும் நிறைவேறாமல் ஆகி விடுகின்றது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நோன்பு என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பு நோற்கின்றீர்களோ அதுவே ஆகும். நோன்பை விடுவது என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் நோன்பை விடுகின்றீர்களோ அதுவே ஆகும். ஈதுல் அழ்ஹா என்பது எந்த நாளில் நீங்கள் அனைவரும் அறுத்து பலியிடுகிறீர்களோ அதுவே ஆகும். *(நூல்: திர்மிதி - 697)*

இமாம் அபுல் ஹசன் அஸ்ஸிந்தி ؒ அவர்கள், இந்த ஹதீஸிற்கு விளக்கம் அளிக்கும் போது கூறுகிறார்கள், இதுபோன்ற காரியங்களில் (நோன்பை நோற்பது, நோன்பை விடுவது) தனிநபர்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அவர்கள் தனித்து செயல்படவும் கூடாது. மாறாக இந்த அதிகாரம், ஆட்சியாளர் மற்றும் ஜமாஅத்தி (முஸ்லிம்களின் கூட்டமைப்பி)ற்கு வழங்கப்படும். ஆட்சியாளருக்கும், ஜமாஅத்திற்கும் கட்டுப்படுவது தனிநபர்கள் மீது கடமையாகும். *(நூல்: ஹாஷியத்து ஸின்தி அலா இப்னி மாஜா)*

ஷெய்க் அல்பானி ؒ அவர்கள் கூறுகிறார்கள்,

மஸ்ரூக் என்ற தாபயீ மதீனாவில் மக்கள் அரஃபா நோன்பை நோற்றிருக்கும் போது, இன்று மக்காவில் துல்ஹஜ் பத்தாக இருக்கும் என கருதி நான் நோன்பு நோற்கவில்லை என்று கூறிய போது, அவர்களின் தனிப்பட்ட கருத்தை கணக்கில் எடுக்காமல், ஜமாஅத்தை பின்பற்ற வேண்டும் என ஆயிஷா ﵂ அவர்கள், அவர்களுக்கு தெளிவுப்படுத்தினார்கள்.

மேலும் ஷெய்க் அல்பானி ﵀ அவர்கள் கூறுகிறார்கள், இந்த நிலைபாடே இலகுவான ஷரியத்தில் பொருத்தமான வழிமுறையாகும். இதன் நோக்கம் மக்களை ஒன்றிணைப்பதும், அவர்களின் வரிசையை ஒருமிப்பதும் ஆகும். தனிநபர்களின் கருத்துகளிலிருந்து, முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைக்கின்ற அனைத்தை விட்டும் அவர்களை தூரமாக்குவதற்கு வழிவகை செய்யும். முஸ்லிம்கள் கூட்டாக நிறைவேற்றுகின்ற இபாதத்துகளான நோன்பு, ஜமாஅத் தொழுகை போன்ற வணக்கங்களில், தனிநபரின் கருத்துக்கு ஷரியத்தில் எவ்வித மதிப்பும் இல்லை. அந்த தனிநபரின் கருத்து, அவரின் பார்வையில் சரியானதாக இருந்தாலும் சரியே! *(நூல்: அஸ்ஸில்ஸிலத்து ஸஹீஹா - 1/443 - 445)*

மேலுள்ள தகவல்களிலிருந்து ஒரு முக்கியமான

விஷயத்தை அறியலாம். நோன்பு மற்றும் பெருநாள் போன்ற இபாதத்துகளை முஸ்லிம்கள் கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என்பது அடிப்படையாகும். இந்த அடிப்படையான நோக்கம் செயல் வடிவம் பெறுவதற்கு முஸ்லிம் ஆட்சியாளர்கள், காஜிகள் காரணமாக இருக்கிறார்கள். ஆகவேதான் ஷரியத்தில் பிறையை தீர்மானிக்கும் அதிகாரம் தனிநபர்களுக்கு வழங்கப்படாமல், ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் ஆட்சியாளர்கள் இல்லாத காஃபிர் நாடுகளில் வசிக்கும் சிறுபான்மை முஸ்லிம்கள், தங்களின் நோன்பையும், பெருநாளையும் எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் அறிந்துக் கொண்டால், பிறை பிரச்சனையில் தீர்வை பெற்று விடலாம்.

நோன்பையும், பெருநாளையும் முஸ்லிம்கள் கூட்டாக நிறைவேற்றுவது அடிப்படை அம்சமாகும். அந்த அடிப்படைக்கு செயல் வடிவம் தருவதற்கு காரணமாக இருப்பவர்கள் தான் முஸ்லிம் ஆட்சியாளர்கள். முஸ்லிம் ஆட்சியாளர் என்ற காரணி இல்லாத நிலையில், நோன்பு மற்றும் பெருநாளை முஸ்லிம்கள் கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையை செயல்படுத்துவதற்கு

வேறு என்ன காரணிகள் உள்ளது என்று நாம் பார்க்க வேண்டும்.

காஃபிர்களின் நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்கள் பிறையை எவ்வாறு தீர்மானிப்பது என்பதை பற்றி இஸ்லாமிய அறிஞர்கள் கூறும்போது, பிறையை தீர்மானிக்கும் அதிகாரத்தை அந்தந்த நாடுகளில் உள்ள இஸ்லாமிய மர்கஸ்கள், (சென்டர்கள்) முஸ்லிம்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கு வழங்க வேண்டும். அவை இஸ்லாமிய அரசாங்கம் இல்லாத நிலையில், முஸ்லிம்களின் இந்த பொருப்புகளை நிர்வகிக்க வேண்டும் என கூறுகிறார்கள்.

இந்தியாவில், காஜிகளை நியமிக்கும் முறை முகலாயர்களின் ஆட்சி காலத்திலிருந்து இன்று வரை நடைமுறையில் உள்ளது. தமிழகத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் காஜிகளுக்கும், முஸ்லிம்களின் சில பொறுப்புகளை நிர்வகிப்பதற்கான அதிகாரம் முஸ்லிம்களால் வழங்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு பிறை, திருமண பதிவு போன்ற அம்சங்கள்.

தமிழகத்தில் காஜி செய்கின்ற அறிவிப்பை தான் பொதுவாக முஸ்லிம்கள் ஏற்று செயல்படுத்தி வருகிறார்கள். எனவே முஸ்லிம்களுக்கு மத்தியில் சர்வதேச பிறை மற்றும் ஹிஜ்ரா கமிட்டி பிறை என்று

பிரிவினையை உண்டாக்காமல், அனைத்து மக்களுடன் ஒரே நாளில் நோன்பையும், பெருநாளையும் அமைத்துக் கொள்வதே சரியான நிலைபாடாகும். அப்போது தான் முஸ்லிம்கள் ஒற்றுமையாக நோன்பையும் பெருநாளையும் நடைமுறைப்படுத்த முடியும்.

காஜி தொடர்பான விமர்சனமும் - விளக்கமும்

விமர்சனம்

காஜி தவறான கொள்கையை சார்ந்த பித்அத்வாதியாக இருப்பதினால், நாங்கள் அவரை ஏற்க மாட்டோம். எனவே நாங்கள் ஏன் அவருக்கு கட்டுப்பட வேண்டும்?

விளக்கம்

1. முஸ்லிம்கள் நோன்பையும், பெருநாளையும் ஒற்றுமையாக கொண்டாடுவது தான் அடிப்படையான நோக்கமாகும். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு காரணமாக இருப்பது மட்டும் தான் காஜியின் பணியாகும். எனவே காரணமாக இருப்பவரை ஏற்க மாட்டோம் என்ற பெயரில் அடிப்படை நோக்கத்தை சீர்குலைக்க நினைப்பது தவறான போக்காகும்.

2. தமிழகத்தில் பெருபான்மையான முஸ்லிம்கள், ஊர் பிறையை பின்பற்றக் கூடியவர்கள் தான். அஹ்லுல்

ஹதீஸ் அமைப்பினர், அமைப்பு சாரா தவ்ஹீத் சிந்தனையாளர்கள், இஸ்லாமிய இயக்கங்களில் பயணிக்கும் தவ்ஹீத் வாதிகள், கொள்கை ரீதியான சில தவறுகள் இருந்தாலும், ஷிர்க் செய்யாத தப்லீக் ஜமாஅத்தினர், தவ்ஹீத் ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் ஆகிய அனைவரும் காலகாலமாக ஊர் பிறையை பின்பற்றி வருகிறார்கள். இவர்கள் 95% சதவீதத்திற்கும் அதிகமாக எண்ணிக்கையில் இருக்கின்றார்கள்.

மக்களுடன் சேர்ந்தே நோன்பையும், பெருநாளையும் கொண்டாட வேண்டும் என்ற நபி ﷺ அவர்களின் கட்டளைக்கு இணங்க, பெரும்பான்மையான முஸ்லிம்கள், ஊர் பிறையை பின்பற்றி வரும் போது, சிலர் நாங்கள் சர்வதேச பிறையை தான் பின்பற்றுவோம் என்று சொல்வது பிரிவினையை உண்டாக்குவதும், ஒற்றுமையை சீர்குலைப்பதும் ஆகும்.

காஜியின் அறிவிப்பை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று கூறுபவர்கள், குறைந்தது நபி ﷺ அவர்களின் கட்டளையை ஏற்று பெரும்பான்மை முஸ்லிம்களோடு நோன்பையும், பெருநாளையும் நடைமுறைபடுத்தலாம் அல்லவா? நபி ﷺ அவர்களின் கட்டளைக்கு

மாற்றமாக தனியாக செயல்பட்டு ஏன் பிரிவினையை ஏற்படுத்த வேண்டும்?

சர்வதேச பிறையை பின்பற்றுபவர்கள், காஜியின் அறிவிப்பை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதற்காக, சர்வதேச பிறை நிலைபாட்டை பின்பற்றுகிறார்களா? அல்லது பிரிவினை ஏற்பட்டாலும் சரியே, சர்வதேச பிறை நிலைபாட்டை விடமாட்டோம் என்று தங்களின கருத்தை நிலைநாட்ட காஜியை கொண்டு வருகின்றார்களா? (அல்லாஹ் மிக அறிந்தவன்)

முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தாமல், ஒற்றுமையாக நோன்பையும் மற்றும் பெருநாளையும் கொண்டாட வேண்டும் என்பது மார்க்கம் கூறுகின்ற அடிப்படை. அந்த அடிப்படையை பொருந்தாத காரணங்களை சொல்லி விட நினைப்பது தவறான போக்காகும்.

3. இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம் ஆட்சியாளர்களில் பலர், பித்அத்தான கொள்கையை பின்பற்றக் கூடியவர்களாக தான் இருந்துள்ளார்கள். குறிப்பாக பனூ அப்பாஸின் ஆட்சியாளர்களை எடுத்துக் கொண்டால், அவர்களில் சிலர் முஅதஜிலா சிந்தனையை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஜஹமிய்யாக்களின் தாக்கமும் அவர்களிடம்

இருந்தது. அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற குஃப்ரான கொள்கையை ஆட்சியாளர்கள் கொண்டிருந்தார்கள். அந்த கொள்கையை ஏற்காத அறிஞர்களை துன்புறுத்தினார்கள்.

இஸ்லாமிய அறிஞர்களில் எந்த ஒருவரும், இதுபோன்ற ஆட்சியாளர்களை ஆட்சியாளர்களாகவே ஏற்க கூடாது என்று கூறவில்லை. முஸ்லிம்களின் விவகாரங்களுக்கு, இவர்கள் பொறுப்பாளிகளாக ஆகமாட்டார்கள் என்றும் கூறவில்லை.

ஆட்சியாளர்கள், அல்லது அவர்களின் அந்தஸ்தில் வருகின்ற காஜிகள் பித்அத்வாதிகளாக இருந்த போதிலும், அன்று வாழ்ந்த அறிஞர்களும், பொது மக்களும் நன்மையான விஷயங்களில், அவர்களுக்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

4. சமகாலத்தில் வாழ்ந்து மறைந்த அறிஞர்களிடம், காஃபிர் நாடுகளில் வசிக்கின்ற முஸ்லிம்கள் எவ்வாறு நோன்பையும், பெருநாளையும் தீர்மானிப்பது என்று கேட்கப்பட்ட போது, அவர்களின் நாடுகளில் உள்ள இஸ்லாமிய மர்கஸ்கள், காஜிகள் போன்றவர்களுக்கு கட்டுப்பட்டு பிறையை தீர்மானிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அவ்வாறு கூறும் போது அவர்கள், ஸுன்னாவை

பின்பற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும், பித்அத்வாதியாக இருக்க கூடாது என்றெல்லாம் நிபந்தனைகளை விதிக்காமல் பொதுவாகவே கூறுகிறார்கள். சூஃபியிஸ கொள்கையை பின்பற்றுபவர்கள் ஆட்சியாளர்களாகவும், காஜிகளாகவும் உள்ள நாடுகளை சேர்ந்தவர்களால் தான், இந்த ஃபத்வா அந்த அறிஞர்களிடம் கேட்கப்பட்டது.

5. தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காஜி நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அதிகமானவர்கள் தேவ்பந்த் (தப்லீக்) சிந்தனையா ளர்கள் தான் உள்ளார்கள். காஜியின் பிறை அறிவிப்பு தனிநபர் சார்ந்ததல்ல, பல நபர்களை சேர்த்த ஒரு குழு எடுக்கும் முடிவு என்பதை நாம் அறிந்திட வேண்டும். இந்த அதிகாரப்பூர்வமான முடிவை தான் ஜமாஅத்துல் உலமா மற்றும் அஹ்லே ஹதீஸ் அமைப்பினரும் அறிவிப்பு செய்து நடைமுறைப்படுத்துகிறார்கள்.

குறைந்தது அஹ்லே ஹதீஸ் அமைப்பினரின் அறிவிப்பை ஏற்று, நபி ﷺ அவர்களின் கட்டளையான மக்களுடன் சேர்ந்து நோன்பையும், பெருநாளையும் நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச பிறையின் அடிப்படையில் செயல்படுபவர்கள் முன் வரவேண்டும்.

ஒவ்வொரு பகுதிக்குமான எல்லைகளை யார் பிரித்தது?

ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்று எல்லையை யார் ஏற்படுத்தியது? சர்வதேச பிறை நிலைபாட்டை சரிகாண்பவர்களில் பாமரர்கள் மற்றும் ஆலிம்கள் என்ற வித்தியாசமின்றி சிலர், இந்த கேள்வியை எழுப்புவதை காணலாம்.

1. நாடுகளுக்கு மத்தியில் பிறை உதயமாகுவதில் நேர வித்தியாசம் உள்ளது என்பது எல்லா அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட யதார்த்தமான ஓர் அம்சமாகும். அதனடிப்படையில் தான் ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்ற நிலைபாடு ஏற்பட்டது.

2. ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்ற நிலைபாடு சரியானதா? அல்லது சர்வதேச பிறை நிலைபாடு சரியானதா என்ற கருத்து வேறுபாடு ஃபிக்ஹ் துறையில் காலகாலமாக பேசப்பட்டு வருகிறது. இதில் சர்வதேச பிறை நிலைபாட்டை சரிகாண்பவர்கள் கூட, ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்பதற்கு எல்லையை யார் ஏற்படுத்தியது என்று கேள்வி எழுப்பியதில்லை.

3. இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் சிரியாவில் பார்த்த பிறை மதீனாவிற்கு பொருந்தாது என்று கூறியபோது, சிரியாவில் பிறையை பார்த்த குரைப் ﵀ அவர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்ற எல்லைகளை யார் பிரித்தது என்று இப்னு அப்பாஸ் ﵄ அவர்களிடம் கேட்கவில்லை

4. இந்த ஹதீஸிற்கு பாடதலைப்பிட்ட ஹதீஸ்கலை அறிஞர்கள், ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்று தலைப்பிட்டுள்ளார்கள்.

بَابُ مَا جَاءَ لِكُلِّ أَهْلِ بَلَدٍ رُؤْيَتُهُمْ

இமாம் திர்மிதி ﵀ அவர்கள், ஒவ்வொரு ஊர்வாசிகளுக்கும் அவர்கள் பார்க்கின்ற பிறை பற்றி வந்துள்ள பாடம் என தலைப்பிட்டுள்ளார்கள்.

اخْتِلَافُ أَهْلِ الْآفَاقِ فِي الرُّؤْيَةِ

இமாம் நஸாயி ﵀ அவர்கள், பிறை பார்ப்பதில் (உலகின்) பல பாகங்களை சேர்ந்தவர்கள் வேறுபடுவது என்று தலைப்பிட்டுள்ளார்கள்.

بَابُ بَيَانِ أَنَّ لِكُلِّ بَلَدٍ رُؤْيَتَهُمْ وَأَنَّهُمْ إِذَا رَأَوُا الْهِلَالَ بِبَلَدٍ لَا يَثْبُتُ حُكْمُهُ لِمَا بَعُدَ عَنْهُمْ

ஸஹீஸ் முஸ்லிமில் வந்துள்ள ஹதீஸிற்கு இமாம்

நவவீ ﵀ அவர்கள், ஒவ்வொரு ஊரினருக்கும், அவர்கள் பார்க்கின்ற பிறை தான். ஒரு ஊரில் பிறை பார்க்கப்பட்டால், அவர்களை விட்டு தூரமாக இருக்கின்றவர்களுக்கு அந்த பிறை பொருந்தாது என்பதை தெளிவுபடுத்தி வந்துள்ள பாடம் என்று தலைப்பிட்டுள்ளார்கள்.

இதற்கு விளக்கமளித்த பல அறிஞர்கள், ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்ற நிலைபாடே சரியானதாகும் என்று கூறியுள்ளார்கள். மார்க்கத்தில் பரவலாக பல அறிஞர்களால் பேசப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்ற நிலைபாட்டை விமர்சிக்கும் விதமாக, ஒவ்வொரு பகுதிக்குமான எல்லைகளை யார் பிரித்தது? என்று ஆலிமாக இருந்துக் கொண்டு ஒருவர் கேட்பார் என்றால், அவரை என்ன சொல்வது?

5. எல்லைகளை யார் பிரித்தது என்ற விமர்சனத்தை எழுப்பி சர்வதேச பிறையை சரிகாண்பவர்கள் கூட, தங்கள் பகுதியில் ஃபஜ்ர் நேரம் வரும் வரை ஸஹர் செய்வார்கள். தங்கள் பகுதியில் சூரியன் மறைந்த பிறகு நோன்பை திறப்பார்கள். ஐந்து வேளை தொழுகைகளையும் தமது பகுதியில் உள்ள நேரத்தை அடிப்படையாக கொண்டே செயல்படுவார்கள்.

ஸஹர், இஃப்தார், ஐந்து வேளை தொழுகைகளை

நிறைவேற்றுவதில் சூரிய ஓட்டத்தை வைத்து நாடுகளுக்கு மத்தியில் வித்தியாசம் உள்ளதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதுபோலவே நாடுகளுக்கு மத்தியில் சந்திரன் உதயமாகும் நேர வித்தியாசத்தை வைத்து மாதங்களின் தொடக்கம் மற்றும் முடிவு மாறுபடும் என்பதை ஏற்பதில் என்ன தயக்கம்?

லைலத்துல் கத்ர் இரவு எப்போது?

சர்வதேச பிறையை சரிகாணக் கூடியவர்களில் சிலர், ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பிறை என்ற நிலைபாட்டை நாம் எடுப்பதாக இருந்தால், லைலத்துல் கத்ர் இரவை எவ்வாறு தீர்மானிப்பது. ஏனெனில் லைலலத்துல் கத்ர் என்பது ஓர் இரவு தான். மேலும் நபி ﷺ அவர்கள், அதனை ஒற்றைப்படை இரவுகளில் தேடுங்கள் என்றுள்ளார்கள். சவூதியில் பிறையை பார்த்த மறுநாள் தான் இந்தியாவில் பிறை தென்படுகிறது. எனவே ஒற்றைப்படை இரவுகளை எவ்வாறு தீர்மானிப்பது என்ற கேள்வியை எழுப்பி, சர்வதேச பிறை நிலைபாட்டிற்கு இதனை ஓர் ஆதாரமாக குறிப்பிடுகின்றனர்.

இதற்கான பதிலை பார்ப்போம்,

1. லைலத்துல் கத்ர் இரவை மக்கள் அனைவரும் ஒரே நாளில் அடைந்து கொள்வது முக்கியமான

அம்சமாக இருந்திருந்தால், அல்லாஹ்வின் தூதர் அவர்கள், அது குறித்து உம்மத்திற்கு தெரியப்படுத்தியிருப்பார்கள். மக்கா அல்லது மதீனாவில் பார்க்கப்படுகின்ற பிறையின் அடிப்படையில் அனைவரும் லைலத்துல் கத்ர் இரவை தேட வேண்டும் என்று, அன்று வாழ்ந்த மக்களிடம் பொது அறிவிப்பை செய்திருப்பார்கள். ஆனால் அவ்வாறு எந்த ஒரு அறிவிப்பையும் நபி ﷺ அவர்கள் செய்யவில்லை. நான்கு கலீபாக்கள், அவர்களுக்கு பிறகு வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களில் எந்த ஒருவரும், மக்காவில் பார்க்கப்படுகின்ற பிறையின் அடிப்படையில் லைலத்துல் கத்ர் இரவை தேட வேண்டும் என்று மற்ற பகுதிகளுக்கு கடிதம் அனுப்பி ஆணை பிறப்பிக்கவில்லை. எனவே லைலத்துல் கத்ர் இரவு வாதத்தை வைத்துக் கொண்டு, சர்வதேச பிறையின் அடிப்படையில் தனித்து செயல்படுவதை நியாயப்படுத்த முனைவது தவறான அம்சமாகும்.

2. பிறையை தீர்மானிப்பது தொடர்பான விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்ட அறிஞர்கள் கூட தங்களின் வாதத்தை உறுதிப்படுத்த லைலத்துல் கத்ர் இரவை எவ்வாறு தேடுவது என்ற வாதத்தை எழுப்பி,

தங்களின் கருத்தை நிலைநாட்டவில்லை. ஏனெனில் மார்க்கத்தில், நோன்பை ஆரம்பபிப்பதற்கும், முடிப்பதற்கும் லைலத்துல் கத்ர் இரவை நபி ﷺ அவர்கள், ஆதாரமாக ஆக்கவில்லை. மாறாக பிறையை தீர்மானிப்பதை தான் ஆதாரமாக ஆக்கி உள்ளார்கள்.

3. சவூதியில் பிறை பார்ப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பு சில ஆப்ரிக்கா மற்றும் மேற்கிலுள்ள சில நாடுகளில் பிறை தென்பட்டு விடுகிறது. அந்த பிறை பார்த்த தகவலை சவூதி அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் சவூதியில் பிறை பார்த்தால் மட்டுமே சவூதி அரேபியா ஏற்றுக் கொள்ளும். இந்த இடத்தில் ரமளான கடைசி பத்தின் ஒற்றைப்படை இரவுகளை எந்த நாட்டின் பிறையின் அடிப்படையில் தீர்மானிப்பது? சவூதி அரேபியாவை அடிப்படையாக கொண்டு தான் ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரை தேட வேண்டும் என்றால்? அவர்களுக்கு ஒருநாள் முன்பு பிறை பார்த்தவர்களின் நிலை என்ன?

4. லைலத்துல் கத்ர் இரவு ஒற்றைப்படை இரவுகளில் மட்டுமே வருவதில்லை. இரட்டைப்படை இரவுகளிலும் வரும் என்பதற்கு மார்க்கத்தில்

தெளிவான ஆதாரங்கள் உள்ளது. ரமளானின் கடைசி பத்து இரவுகளில் லைலத்துல் கத்ரை தேடுவது சம்பந்தமாக, நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களிலிருந்து மூன்று நிலைகளை காணலாம்.

முதலாவது: லைலத்துல் கத்ர் இரவை, கடைசி பத்தின் ஒற்றைப்படை இரவுகளில் தேடுங்கள்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ تَحَرَّوْا لَيْلَةَ القَدْرِ فِي الوِتْرِ، مِنَ العَشْرِ الأَوَاخِرِ مِنْ رَمَضَانَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் உள்ள ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள்! *(அறிவிப்பாளர்: ஆயிஷா ؓ, நூல்: புகாரி - 2017)*

இரண்டாவது: சில அறிவிப்புகளில் லைலத்துல் கத்ரை ஒற்றைப்படை அல்லது இரட்டைப்படை என்று குறிப்பிடாமல், நபி ﷺ அவர்கள் கடைசி பத்தில் தேடுங்கள் என்று பொதுவாக கூறியுள்ளார்கள். இதில் ஒற்றைப்படை மற்றும் இரட்டைப்படை ஆகிய இரண்டும் அடங்கும்.

عَنْ عَائِشَةَ، قَالَتْ: كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يُجَاوِرُ فِي العَشْرِ الأَوَاخِرِ مِنْ رَمَضَانَ وَيَقُولُ تَحَرَّوْا لَيْلَةَ القَدْرِ فِي العَشْرِ الأَوَاخِرِ مِنْ رَمَضَانَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ரமளானின் கடைசிப்பத்து நாள்களில் இஃதிகாஃப் இருப்பார்கள்; “ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள்!” எனக் கூறுவார்கள். *(அறிவிப்பாளர்: ஆயிஷா ؓ, நூல்: புகாரி - 2020.)*

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «التَمِسُوهَا فِي العَشْرِ الأَوَاخِرِ مِنْ رَمَضَانَ لَيْلَةَ القَدْرِ، فِي تَاسِعَةٍ تَبْقَى، فِي سَابِعَةٍ تَبْقَى، فِي خَامِسَةٍ تَبْقَى

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் லைலத்துல் கத்ரை தேடுங்கள்! ‘லைலத்துல் கத்ரை’ (கடைசி பத்தில்) ஒன்பது இரவுகள் மீதமிருக்கும் போது தேடுங்கள், ஏழு இரவுகள் மீதமிருக்கும் போது தேடுங்கள், ஐந்து இரவுகள் மீதமிருக்கும் போது தேடுங்கள்!' *(அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ؓ, நூல்: புகாரி - 2021)*

இந்த ஹதீஸில் நபி ﷺ அவர்கள், ஒன்பது மீதமிருக்கும் போது தேடுங்கள் என நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கு விளக்கம் அளிக்கும் அறிஞர்கள் கூறும்போது, இது ஒற்றைப்படை இரவு மற்றும் இரட்டைப்படை இரவு ஆகிய இரண்டையுமே குறிக்கிறது என்கிறார்கள். ரமளான் மாதத்தின் எண்ணிக்கை 29 நாட்களாக இருந்தால்,

ஒன்பது மீதமிருக்கும் போது என்பது இருபதாவது நோன்பு முடிந்து வருகின்ற இருபத்தி ஒன்றாவது இரவை குறிக்கும். ரமாளான் மாதத்தின் எண்ணிக்கை 30 நாட்களாக இருந்தால், இருபத்தி ஒன்றாவது நோன்பு முடிந்து வருகின்ற இருபத்தி இரண்டாவது இரவை குறிக்கும் என்கிறார்கள்.

ஏழு இரவுகள் மீதமிருக்கும் போது என்பது, ரமளான் மாதத்தின் எண்ணிக்கை 29 நாட்களாக இருந்தால், இருபத்தி இரண்டாவது நோன்பை அடுத்து வருகின்ற இருபத்தி மூன்றாவது இரவை குறிக்கும். ரமளான் மாதத்தின் எண்ணிக்கை 30 நாட்களாக இருந்தால், இருபத்தி மூன்றாவது நோன்பை அடுத்து வருகின்ற இருபத்தி நான்காவது இரவை குறிக்கும் என்கிறார்கள்.

மேலுள்ள ஹதீஸ்களிலிருந்து லைலத்துல் கத்ர் இரவு ஒற்றைப்படை இரவுகளிலும் வரும். அவ்வாறே இரட்டைப்படை இரவுகளிலும் வரும் என்பதை நபி ﷺ அவர்களின் கூற்றிலிருந்தே அறியலாம்.

மூன்றாவது: சில அறிவிப்புகளில், லைலத்துல் கத்ர் இரவு இரட்டைப்படை இரவுகளில் தான் வரும் என்றும் வந்துள்ளது.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ، قَالَ: اعْتَكَفَ رَسُولُ اللهِ صَلَّى

اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْعَشْرَ الْأَوْسَطَ مِنْ رَمَضَانَ، يَلْتَمِسُ لَيْلَةَ الْقَدْرِ قَبْلَ أَنْ تُبَانَ لَهُ، فَلَمَّا انْقَضَيْنَ أَمَرَ بِالْبِنَاءِ فَقُوِّضَ، ثُمَّ أُبِينَتْ لَهُ أَنَّهَا فِي الْعَشْرِ الْأَوَاخِرِ، فَأَمَرَ بِالْبِنَاءِ فَأُعِيدَ، ثُمَّ خَرَجَ عَلَى النَّاسِ، فَقَالَ: «يَا أَيُّهَا النَّاسُ، إِنَّهَا كَانَتْ أُبِينَتْ لِي لَيْلَةُ الْقَدْرِ، وَإِنِّي خَرَجْتُ لِأُخْبِرَكُمْ بِهَا، فَجَاءَ رَجُلَانِ يَحْتَقَّانِ مَعَهُمَا الشَّيْطَانُ، فَنُسِّيتُهَا، فَالْتَمِسُوهَا فِي الْعَشْرِ الْأَوَاخِرِ مِنْ رَمَضَانَ، الْتَمِسُوهَا فِي التَّاسِعَةِ وَالسَّابِعَةِ وَالْخَامِسَةِ» قَالَ قُلْتُ: يَا أَبَا سَعِيدٍ، إِنَّكُمْ أَعْلَمُ بِالْعَدَدِ مِنَّا، قَالَ: «أَجَلْ، نَحْنُ أَحَقُّ بِذَلِكَ مِنْكُمْ» ، قَالَ قُلْتُ: مَا التَّاسِعَةُ وَالسَّابِعَةُ وَالْخَامِسَةُ؟ قَالَ: «إِذَا مَضَتْ وَاحِدَةٌ وَعِشْرُونَ، فَالَّتِي تَلِيهَا ثِنْتَيْنِ وَعِشْرِينَ وَهِيَ التَّاسِعَةُ، فَإِذَا مَضَتْ ثَلَاثٌ وَعِشْرُونَ، فَالَّتِي تَلِيهَا السَّابِعَةُ، فَإِذَا مَضَى خَمْسٌ وَعِشْرُونَ فَالَّتِي تَلِيهَا الْخَامِسَةُ»

அபூசயீத் அல்குத்ரீ ﵁ அவர்கள் கூறியதாவது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தமக்கு “லைலத்துல் கத்ர்” இரவு பற்றிய குறிப்பு வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ரமளான் மாதத்தின் நடுப்பத்து நாட்களில் லைலத்துல் கத்ரைத் தேடியவாறு “இஃதிகாஃப்” இருந்தார்கள். நடுப்பத்து நாட்கள் முடிந்ததும் (தாம் வீற்றிருந்த) கூடாரத்தை அகற்றுமாறு உத்தரவிட, அவ்வாறே அது அகற்றப்பட்டது. பின்னர் அவர்களுக்கு “லைலத்துல் கத்ர்” இரவு இறுதிப்பத்து இரவுகளில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே, மீண்டும்

கூடாரம் அமைக்குமாறு உத்தரவிட்டார்கள். மீண்டும் கூடாரம் அமைக்கப்பட்ட பிறகு மக்களிடம் புறப்பட்டு வந்து, “மக்களே! லைலத்துல் கத்ர் பற்றிய குறிப்பு எனக்கு அறிவிக்கப்பட்டது. அதைப் பற்றிச் சொல்வதற்காக உங்களிடம் நான் புறப்பட்டு வந்தேன். அப்போது இரண்டு மனிதர்கள் தமது உரிமை குறித்து விவாதித்துக் கொண்டிருந்தனர். அவ்விருவருடன் ஷைத்தானும் இருந்தான். அதனால் அதை(ப் பற்றிய குறிப்பை) நான் மறக்கவைக்கப்பட்டேன். ஆகவே, ரமளானின் இறுதிப் பத்தில் அந்த இரவை நீங்கள் தேடிக்கொள்ளுங்கள். ஒன்பது, ஏழு, ஐந்து ஆகிய இரவுகளில் அதை நீங்கள் தேடிக்கொள்ளுங்கள்! என்றார்கள்.

இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூநள்ரா ﵀ அவர்கள் கூறுகிறார்கள்:

நான் அபூசயீத் ﵁ அவர்களிடம் “அதன் எண்ணிக்கை பற்றி எங்களைவிட நீங்களே நன்கறிந்தவர்கள்” என்றேன். அதற்கு அவர்கள், “ஆம். உங்களைவிட நாங்களே அதற்குத் தகுதியானவர்கள்” என்றார்கள். நான், “ஒன்பது, ஏழு, ஐந்து என்பவை எவை?” என்று கேட்டேன். அதற்கு அவர்கள், இருபத்தொன்றாவது இரவு முடிந்து, அதையடுத்து வரும் இருபத்து இரண்டாவது இரவே ‘ஒன்பது’ ஆகும். இருபத்து மூன்றாவது இரவு முடிந்து

அடுத்து வரும் (இருபத்து நான்காவது) இரவே 'ஏழு' ஆகும். இருபத்து ஐந்தாவது இரவு முடிந்து அடுத்து வரும் இரவே 'ஐந்து' ஆகும்" என்று விடையளித்தார்கள். *(நூல்: ஸஹீஹ் முஸ்லிம் - 2172)*

இந்த ஹதீஸை அறிவிக்கும் அபு சயீத் அல்குத்ரி ﵁ அவர்கள் தான் லைலத்துல் கத்ரை ஒற்றைப்படை இரவுகளில் தேடுங்கள் என்ற அறிவிப்பையும் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸில் நபி ﷺ அவர்களின் கூறியதின் விளக்கம் என்ன என்று அவர்களிடம் கேட்கப்பட்ட போது, இரட்டைப்படை இரவுகளை குறிப்பிடுகிறார்கள். ஹதீஸ்கலையின் விதிகளில் கூறுவார்கள், அறிவிப்பாளர் எந்த செய்தியை அறிவிக்கின்றாரோ, அதனை மற்றவர்களை காட்டிலும் நன்கு விளங்கக் கூடியவராக அவர் இருப்பார். அந்த அடிப்படையில் லைலத்துல் கத்ர் இரட்டைப்படை இரவுகளிலும் வரும் என்பதை இந்த ஹதீஸிலிருந்து அறியலாம்.

இந்த அனைத்து ஹதீஸ்களையும் வைத்து பார்க்கும் போது லைலத்துல் கதர் இரவு எல்லா ஆண்டும் ஒரே இரவில் மட்டும் வராது. அது ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நாட்களில் மாறி வரும். இந்த கருத்தை

தான் இமாம் நவவி ﷺ, ஹாஃபிழ் இப்னுல் ஹஜர் அஸ்கலானி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் கூறுகிறார்கள், லைலத்துல் கத்ர் இரவை கடைசி பத்து நாட்களிலும் தேட வேண்டும். அது ஒற்றைப்படை இரவுகளிலும் வரும். ரமளான் மாதத்தின் எண்ணிக்கை 30 நாட்களாக இருந்தால், இரட்டைப்படை இரவுகளில் வரும் என்கிறார்கள். *(நூல்: மஜ்மூஉல் ஃபதாவா - 25/285)*

ஆக லைலத்துல் கத்ரை கடைசி பத்து இரவுகளில் ஒற்றைப்படை மற்றும் இரட்டைப்படை ஆகிய அனைத்து இரவுகளிலும் தேடுவதே, அந்த இரவை பெறுவதற்கு மிக சரியான வழிமுறையாக இருக்கும்.

அரஃபா நோன்பு எப்போது?

ஹாஜிகள் அரஃபாவில் கூடுகின்ற நாள் தான் அரஃபா நாளாகும். அந்த நாளில் தான் நாம் அரஃபா நோன்பை நோற்க வேண்டும். எனவே சர்வதே பிறை நிலைபாடு தான் சரி என்பதற்கு இந்த வாதத்தை வைக்கின்றனர்.

1. ஆயிஷா ﷺ அவர்களை சந்திப்பதற்கு அரஃபா நாளன்று நான் சென்றேன். (நான் அரஃபா நோன்பை நோற்கவில்லை என்பதை அறிந்துக் கொண்ட

ஆயிஷா ﵂ அவர்கள்) சத்துமாவை செய்து, அதில் இனிப்பை அதிகமாக்கி மஸ்ரூக்கு கொடுங்கள் என்றார்கள். இன்றைய தினம் (மக்காவில்) துல்ஹஜ் 10 நாளாக இருக்குமோ என்று அஞ்சியே நான் (அரஃபா) நோன்பை நோற்கவில்லை என்று கூறினேன். அதற்கு ஆயிஷா ﵂ அவர்கள் மக்கள், எந்த நாளில் அறுத்து பலியிடுவார்களோ அதுவே அறுத்து பலியிடும் நாளாகும். மக்கள், எந்த நாளில் நோன்பை விடுவார்களோ, அதுவே நோன்பை விடுவதற்குரிய நாளாகும் என்றார்கள். *(அறிவிப்பாளர்: மஸ்ரூக் ﵀, நூல்: பைஹகீ - 8209 ஸஹீஹ்)*

மதீனாவில் மக்களுடன் ஆயிஷா ﵂ அவர்கள், அரஃபா நோன்பை நோற்றிருந்தார்கள். அந்த நாளில் அவர்களை சந்திப்பதற்கு வந்த மஸ்ரூக் என்ற தாபயீ, இன்று அறுத்து பலியிடக்கூடிய துல்ஹஜ் 10 நாளாக இருக்குமோ என்று எண்ணியதாலேயே நான் அரஃபா நோன்பை (இன்று) நோற்கவில்லை என்றார்கள். அதற்கு ஆயிஷா ﵂ அவர்கள், நாம் வாழுகின்ற மதீனாவில் மக்கள் எந்த நாளன்று அறுத்து பலியிடுகிறார்களோ, அந்த நாள் தான் துல்ஹஜ் பத்தாவது நாளாகும். நம் பகுதி மக்கள் எந்த நாளன்று நோன்பை விடுகின்றார்களோ,

அந்த நாள் தான் நோன்பை விடுவதற்குரிய நாளாகும் என்று கூறினார்கள்.

நாம் வாழும் பகுதியிலுள்ள மக்களுடன் சேர்ந்து தான், நாம் நோன்பை ஆரம்பிப்பதையும், நோன்பை விடுவதையும் நடைமுறைப்படுத்த வேண்டும். நம் பகுதியில் வாழும் மக்களுக்கு மாற்றமாக, நாம் தனித்து செயல்படக் கூடாது என்று ஆயிஷா ﵂ அவர்கள், மஸ்ரூக் ﵀ அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார்கள்.

2. ஹாஜிகள் அரஃபாவில் கூடுகின்ற நாளன்று தான், அரஃபா நோன்பை நோற்க வேண்டும் என்பது கட்டாயமாக இருந்திருந்தால், நபி ﷺ அவர்கள் அதனை, அன்று அரஃபா மைதானத்திற்கு வெளியே வாழ்ந்த அனைத்து பகுதியினருக்கும் பொது அறிவிப்பு செய்திருப்பார்கள். அப்படி செய்ததாக எந்த ஒரு தகவலும் இல்லை.

மேலும் நான்கு கலீஃபாக்களும், அவர்களை பின்தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களும், மக்காவில் துல்ஹஜ் முதலாவது பிறையை பார்த்த பிறகு, அவர்களின் ஆட்சியின் கீழுள்ள பகுதிகளுக்கு ஆட்களை அனுப்பி, அரஃபாவில் ஹாஜிகள் கூடுகின்ற நாளை பொது அறிவிப்பு செய்ததாக ஒரு தகவலும் இல்லை. ஒவ்வொரு பகுதி மக்களும் அவர்கள் பார்த்த

பிறையின் அடிப்படையில் தான் அரஃபா நோன்பை நோற்றிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

3. சவூதி அரேபியாவிற்கு ஒரு நாளைக்கு முன்பே துல்ஹஜ் முதல் பிறையை பார்த்து விடுகின்ற நாடுகள், அரஃபா நோன்பை என்று நோற்பார்கள்? ஹாஜிகள் அரஃபாவில் கூடுகின்ற நாளான்று, அந்த நாட்டு மக்களுக்கு துல்ஹஜ் பத்தாவது நாளாக இருக்கும். அந்த நாளன்று, அந்த மக்கள் பெருநாளை கொண்டாட வேண்டுமா? அல்லது அரஃபா நோன்பு நோற்க வேண்டுமா?

அஷ்ஷெய்க் ஸாலிஹ் அல்உஸைமீன் ﵀ அவர்கள் இதே கேள்வியை எழுப்பி, அரஃபா நோன்பை ஒவ்வொரு பகுதியினரும் அவர்கள் பார்க்கின்ற பிறையின் அடிப்படையிலேயே நோற்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளார்கள். *(நூல்: மஜ்மூஉல் ஃபதாவா வர்ரஸாயில் லில்உஸைமீன் - 47/20)*

விஞ்ஞான கணிப்பின்படி பிறையை தீர்மானிப்பது

தமிழகத்தில், சர்வதேச பிறையின் அடிப்படையில் சிலர் தனித்து செயல்படுவதை போல், சிலர் விஞ்ஞானத்தின் அடிப்படையில் முதல் பிறையை தீர்மானித்து விட்டோம்

என்று கூறி, நோன்பையும் மற்றும் பெருநாளையும் தனித்து செயல்படுத்தி வருகின்றார்கள். இவர்களை பொருத்த வரை முதல் பிறையின் தோற்றத்தை கணிப்பின் மூலம் மட்டுமே அறிய முடியும். புறக்கண்ணால் அதனை பார்க்க முடியாது என்று கூறுகிறார்கள். இவர்களின் இந்த வாதம் ஸுன்னாவிற்கு எதிரானதாகும்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ذَكَرَ رَمَضَانَ فَقَالَ لاَ تَصُومُوا حَتَّى تَرَوُا الْهِلاَلَ، وَلاَ تُفْطِرُوا حَتَّى تَرَوْهُ، فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَاقْدُرُوا لَه

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், ரமளான் பிறையை நீங்கள் காணும் வரை நோன்பு நோற்காதீர்கள். (மறு)பிறையைக் காணும் வரை நோன்பை விடாதீர்கள். உங்களுக்கு மேக மூட்டம் தென்படுமானால் (முப்பது நாள்களாக) அதைக் கணக்கிட்டு கொள்ளுங்கள். *(அறிவிப்பாளர்: இப்னு உமர் رضي الله عنه, நூல்: புகாரி - 1906)*

இந்த ஹதீஸில் நபி ﷺ அவர்கள், நேரடியாக பிறை பார்ப்பதை பற்றியே கூறுகிறார்கள். ஏனெனில் நபி ﷺ அவர்கள் கூறிய (رأى) என்ற வார்த்தைக்கு ஒரு செயப்படுபொருள் வந்தால், நேரடியாக கண்களால் பார்ப்பதற்கே அது பயன்படுத்தப்படும். (رأى) வார்த்தைக்கு இரண்டு செயப்படுபொருள் வந்தால், கணிப்பது,

எண்ணுவது என்ற பொருள் பயன்படுத்தப்படும். குறிப்பிட்ட இந்த ஹதீஸில் (الْهِلاَل) ஒரு செயப்படுபொருள் வார்த்தை தான் வந்துள்ளது. எனவே நேரடியாக கண்களால் பார்க்கின்ற பிறையை பற்றி தான், நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்.

عن ابْنَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: إِنَّا أُمَّةٌ أُمِّيَّةٌ، لاَ نَكْتُبُ وَلاَ نَحْسُبُ، الشَّهْرُ هَكَذَا وَهَكَذَا يَعْنِي مَرَّةً تِسْعَةً وَعِشْرِينَ، وَمَرَّةً ثَلاَثِينَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், நாம் உம்மி சமுதாயமாவோம். நாம் எழுதவும் மாட்டோம், விஞ்ஞான கணக்கீடு செய்யவும் மாட்டோம். மாதம் என்பது இப்படியும், அப்படியும் இருக்கும். அதாவது சில வேளை இருபத்தொன்பது நாள்களாகவும், சில வேளை முப்பது நாள்களாகவும் இருக்கும். *(அறிவிப்பாளர்: இப்னு உமர் رضي الله عنه, நூல்: புகாரி - 1913)*

ஷெய்குல் இஸ்லாம் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள், நபி ﷺ அவர்கள் எழுதப்பட்டதை படிக்க தெரியாது என்று கூறாமல், நாங்கள் எழுத மாட்டோம், கணக்கீடு செய்ய மாட்டோம் என்கிறார்கள். நமது மார்க்கத்தில் நோன்பை ஆரம்பிப்பதற்கும், விடுவதற்கும் கணக்கீடு செய்யவோ அல்லது எழுதவோ எந்த அவசியமும்

இல்லை. வேதம் கொடுக்கப்பட்டவர்கள் தான், நோன்பை ஆரம்பிப்பதையும், விடுவதையும் கணக்கீடு மற்றும் எழுதுவதின் மூலம் அறிந்திருந்தார்கள். ஏனெனில் அவர்களின் மதம், எழுதியதை அடிப்படை கொண்டு செயல்படக் கூடியதாக இருந்தது. *(நூல்: மஜ்மூஉல் ஃபதாவா - 17/436)*

மேலும் ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் கூறுகிறார்கள், விஞ்ஞான கணக்கிட்டு முறையின் அடிப்படையில் பிறையை உறுதிப்படுத்துவது கூடாது என்பதில் இஜ்மா உள்ளது என்கிறார்கள். *(நூல்: மஜ்மூஉல் ஃபதாவா - 25/132)*

இமாம் அபுல் வலீத் அல்பாஜி ﵀ அவர்கள் கூறுகிறார்கள், கணக்கீடு முறைப்படி பிறையை தீர்மானிக்கக் கூடாது என்பதில் ஸலஃபுகளிடம் இஜ்மா உள்ளது என்கிறார்கள். ஹாஃபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி ﵀ அவர்கள், இதனை தனது ஃபத்ஹுல் பாரியில் பதிவு செய்துள்ளார்கள் (4/127).

ஆகவே விஞ்ஞான கணக்கீட்டின் அடிப்படையில் பிறையை தீர்மானிப்பது, நபி ﷺ அவர்களின் ஸுன்னாவிற்கும் மற்றும் இஜ்மாவிற்கும் எதிரான அம்சம் ஆகும்.

ஸலஃப் அறிஞர்களும், சர்வதேச பிறையும்

பிறை விஷயத்தில், உள்ளூர் பிறை நிலைபாடு சரியானதா? அல்லது சர்வதேச பிறை நிலைபாடு சரியானதா? என்பதில் ஸலஃப் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு இருந்துள்ளது. ஆயினும் அந்த கருத்து வேறுபாடானது, அவர்களின் ஆய்வில் மட்டுமே இருந்துள்ளது. நடைமுறையில், எந்த காலத்திலும் இந்த கருத்து வேறுபாடு இருந்ததில்லை. அதனை தான் ஸலஃப் அறிஞர்களின் தீர்ப்பில் இருந்து காண முடிகிறது.

அல்லாமா இப்னு பாஸ் ﵀ அவர்கள், அஷ்ஷெய்க் அல்பானி ﵀ அவர்கள், சர்வதேச பிறை நிலைபாட்டை தான் சரியானது என்கிறார்கள். ஆனாலும் நீங்கள் வாழும் பகுதி மக்கள், அந்த கருத்தை ஏற்கவில்லை என்றால், நீங்கள் தனித்து செயல்படாதீர்கள். அந்த மக்களுடன் சேர்ந்தே செயல்படுங்கள் என்கிறார்கள்.

சவூதியின் முன்னாள் முஃப்தி அல்லாமா இப்னு பாஸ் ﵀ அவர்கள் கூறுகிறார்கள்,

يجب عليهم أن يصوموا مع الناس ويفطروا مع الناس ويصلوا العيدين مع المسلمين في بلادهم

மக்களுடன் சேர்ந்து நோன்பு நோற்பதும், மக்களுடன் சேர்ந்து நோன்பை விடுவதும், அவர்கள் ஊரில்

வசிக்கின்ற முஸ்லிம்களுடன் சேர்ந்து பெருநாளை கொண்டாடுவதும் அவர்கள் மீது கடமையாகும். *(ஃபதாவா அல்லஜ்னத்து தாயிமா - 10/95)*

அஷ்ஷெய்க் அல்பானி ﵀ அவர்கள் கூறுகிறார்கள், மஸ்ரூக் என்ற தாபயீ மதீனாவில் மக்கள் அரஃபா நோன்பை நோற்றிருக்கும் போது, இன்று மக்காவில் துல்ஹஜ் பத்தாக இருக்கும் என கருதி நான் நோன்பு நோற்கவில்லை என்று கூறிய போது, அவர்களின் தனிப்பட்ட கருத்தை கணக்கில் எடுக்காமல், ஜமாஅத்தை பின்பற்ற வேண்டும் என ஆயிஷா ﵂ அவர்கள், அவர்களுக்கு தெளிவுப்படுத்தினார்கள்.

மேலும் ஷெய்க் அல்பானி ﵀ அவர்கள் கூறுகிறார்கள், இந்த நிலைபாடே இலகுவான ஷரியத்தில் பொருத்தமான வழிமுறையாகும். இதன் நோக்கம் மக்களை ஒன்றிணைப்பதும், அவர்களின் வரிசையை ஒருமிப்பதும் ஆகும். தனிநபர்களின் கருத்துகளிலிருந்து, முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைக்கின்ற அனைத்தை விட்டும் அவர்களை தூரமாக்குவதற்கு வழிவகை செய்யும். முஸ்லிம்கள் கூட்டாக நிறைவேற்றுகின்ற இபாதத்துகளான நோன்பு, ஜமாஅத் தொழுகை போன்ற வணக்கங்களில், தனிநபரின் கருத்துக்கு ஷரியத்தில் எவ்வித மதிப்பும் இல்லை. அந்த

தனிநபரின் கருத்து, அவரின் பார்வையில் சரியானதாக இருந்தாலும் சரியே! *(நூல்: அஸ்ஸில்ஸிலத்து ஸஹீஹா - 1/443 - 445)*

இந்த இமாம்களின் கருத்தை தான் நாங்களும் கூறுகிறோம். ஊர் பிறை மற்றும் சர்வதேச பிறை என்பதில், எந்த ஒரு கருத்தை ஒருவர் சரிகாணக்கூடியவராக இருந்தாலும், ஒரு பகுதியில் பெரும்பான்மையான மக்கள், எந்த பிறையை நடைமுறைப்படுத்துகிறார்களோ, அதனையே அங்கு வாழும் மற்ற மக்களும் நடைமுறைப்படுத்த வேண்டும். பெரும்பான்மையான மக்கள் சர்வதேச பிறையை நடைமுறைப்படுத்தினால், அதனையே அனைவரும் நடைமுறைப்படுத்த வேண்டும். பெரும்பான்மையான மக்கள் ஊர் பிறையை நடைமுறைப்படுத்தினால், அதனையே அனைவரும் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு நாளில் பெருநாளை கொண்டாட முடியும்.

அதன் அடிப்படையில், நாம் வாழுகின்ற பகுதியில் பெரும்பான்மையான மக்கள், ஊர் பிறையை நடைமுறைப்படுத்தக் கூடியவர்களாக இருப்பதினால், நாமும் அவர்களுடன் சேர்ந்தே நோன்பையும், பெருநாளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

சர்வதேச பிறை, விஞ்ஞான பிறை என்று தனித்து நடைமுறைப்படுத்தி, முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடாது.

இறுதியாக நபி ﷺ அவர்களின் ஸுன்னாவை பின்பற்றி, ஒரு பகுதியில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் நோன்பையும், பெருநாளையும் ஒரே நாளில் நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவே நபிவழியை பின்பற்றுவதும், மன்ஹஜ் ஸலஃப் பாதையை பற்றிப்பிடிப்பதும் ஆகும்.

சத்தியத்தை பின்பற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களுக்கு, அல்லாஹ் அருள் புரிவானாக!

وصلى الله على نبينا محمد وآله وصحبه أجمعين.

குறிப்பு